இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 48 ○ 20.10.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

தமிழ் ஆட்சி மொழியானதற்கு விடுதலைப்புலிகளே மூலகாரணம்

அமைச்சர் கருத்து

போர் வெற்றியை தனதாக்கும் கோத்தபாய பொறுப்புக்கூறலிலிருந்து விலகமுடியாது

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி
இலக்கு மின்னிதழுக்குச் சிறப்பு நேர்காணல்

ஐந்து கட்சிகளது ஐக்கியத்திற்குப் பின்னர் அடுத்தது என்ன?

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம், யாழ்.பல்கலைக்கழகம்

சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தல் தமிழ் மக்கள் தனித்தன்மையைப் பேணவேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

அமெரிக்கா ஏன் கோத்தாவை தடுக்கவில்லை?

மு.திருநாவுக்கரசு

ஐந்து தமிழ்க் கட்சிகளின் இணைவு

சாதுரியன்

காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில்
சர்வதேசம் உடனே தலையிட வேண்டும்

அரசியல் அவதானிப்பு மையம் அவசர வேண்டுகோள்

இறுதிக்கட்ட போரில் சரணடைந்து காணாமல் போனவர்கள் தொடர்பில் முரண்பாடான கருத்துக்கள், அறிக்கைகள் வெளிவருவதால் சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் மீண்டும் தலையிட்டு உண்மை நிலைமையை வெளிக்கொண்டு வருவதில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமென அரசியல் அவதானிப்பு மையம் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

சிறீலங்காவில் சனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலைமையில் சனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் கோத்தாபய ராஜபக்ச உட்பட பல்வேறு தரப்பினர் வெளியிட்டு வரும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றன. அத்துடன் உண்மைகளை மூடி மறைப்பதற்கான



முயற்சிகள் உயர் மட்டத்தில் முன்னெடுக்கப் படுகின்றனவா என்ற கேள்வியையும் இது எழுப்பியிருக்கின்றது. இதற்கு சர்வதேச சமூகம் மௌனமாக இருப்பதன் மூலம் ஆதரவை வழங்கக்கூடாது எனவும் அரசியல் அவதானிப்பு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் முக்கியமாக தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

"தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு கிடைத்த பதிலில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக முரணான தகவல் வெளியிடப்பட்டு இருக்கின்றன. கோத்தபாய ராஜபக்சவிடம்

தொடர்ச்சி 04ம் பக்கம்..

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தது உண்மையே
கோத்தபாயா பொய்யுரைக்கின்றார்

அனந்தி சசிதரன்

இறுதிப்போரின் போது நடேசன் உள்ளிட்டவர்கள் வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்த சம்பவம் நடைபெற்றமையானது உண்மையே. அதேபோன்று அருட்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் எழிலன் உள்ளிட்டவர்களும் படையினரிடத்தில் ஒப்படைக்கப்பட்டமையும் உண்மையே. இதில் நேரில் கண்ட சாட்சியங்களும் உள்ளன. அப்படியிருக்கையில் எழுந்தமானமாக கோத்தாபய ராஜபக்ச மாறுபட்ட கருத்துக்களை கூறுவதை ஏற்கவே முடியாது என்று ஈழ தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமும், முன்னாள் மாகாண அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விடயத்தில் இணைத் தலைமைகளை வழங்கிய நாடுகளின் எரிக்சொல்ஹய்ம் போன்ற பிரதிநிதிகள், தமிழகத்தின் கனிமொழி, கார்த்திக் சிதம்பரம், அருட்தந்தை ஜெகத் கஸ்பர், அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து இந்த விடயம் குறித்து பசில் ராஜபக்சவுடன் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்த

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சந்திரநேரு உள்ளிட்டவர்கள் இறுதிப்போரில் நடைபெற்ற மேற்படி இரண்டு சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை அறிந்தவர்களாக இருக்கின்றார்கள் என்றும் அனந்தி சசிதரன் குறிப்பிட்டார். ஆகவே போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகளாகின்ற நிலையில்,

தொடர்ச்சி 04ம் பக்கம்..

ஐ.நாவுக்கு அஞ்சியே 2015 இல் மஹிந்த ஆட்சியை விட்டு ஓடினார் - கிரியல்ல

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிப்பதற்கு தீர்மானித்தபோது அதற்கு முகம் கொடுக்க முடியாமல் சனாதிபதித் தேர்தலுக்கு சென்ற மகிந்த ராஜபக்ச தற்போது கோத்தபாய ராஜபக்ச மூலம் பிரதமராக முயற்சிக்கிறார்.

இதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளித்து விடக்கூடாது என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இன்று யடிநுவர — கடுகன்னாவ சுனில் எஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் குவியும் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள்

அடுத்த மாதம் நடக்கவுள்ள சிறீலங்கா அதிபர் தேர்தல் மீது சில வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் முதல்முறையாக அதிக ஆர்வம் காட்டுகின்றன என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளின் முகவர்கள் பலர் அதிபர் தேர்தல் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக கொழும்புக்கு வந்துள்ளனர். அரசியல் கட்சிகள் எவ்வாறு எதிர்த்துப் போட்டியிடுகின்றன என்பதை கவனிப்பதற்காக புலனாய்வு அமைப்புகள் இரகசியமாக பணியில் ஈடுபட்டுள்ளன. வெளிநாடுகளின் தலையீடுகள், மற்றும் கட்சிகளுடனான தொடர்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டுள்ளதாக தோன்றுகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கோத்தாவின் பகிரங்கமான அறிவிப்பால்
தமிழ்த் தரப்பைச் சந்திக்க சஜித் தயக்கம்

ஐந்து கட்சிகள் பொது இணக்கப்பாட்டிற்கு வந்து சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் தமிழ் மக்களின் உடனடி மற்றும் அன்றாடப் பிரச்சினைகளை உள்ளடக்கிய 13 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்துவது என இணக்கப்பாடு எட்டப்பட்டது.



இந்நிலையில் பிரதான வேட்பாளர்களை சந்திப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்த நிலையில் பொதுஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தான் தமிழ்த் தரப்பினை சந்திக்கப் போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

மறுபக்கத்தில் யாழில் தமிழ்த் தரப்புக்களை சந்தித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு சென்று சஜித்துடன் பேசிவிட்டு தமிழ்த்தரப்பினை உடன் சந்திப்பதாக கூறியபோதும் இதுவரையில் அதற்கான சாத்தியப்பாடுகள் நிகழவில்லை.

கோத்தாபய எதிர்த்துள்ள நிலையில்தான் தமிழ்த் தரப்பினை சந்தித்தால் சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க நேரிட்டு விடும் என்பதால் தமிழ்த் தரப்புடனான சந்திப்புக்களை இழுத்தடிப்புச் செய்து சந்திகாது விடுவதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான தரப்புக்கள் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கை இரகசிய முகாம்கள் தொடர்பில் சூக்கா வேண்டுகோள்

கொழும்பில் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள காலி உரையாடல் சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் இலங்கையில் உள்ள கடற்படையினரின் இரகசியத் தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகள் குறித்த விசாரணைகளுக்கு இலங்கை கடற்படையினர் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என, பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற சர்வதேச அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடற்படையினரின் புலனாய்வு பிரிவினர் இவ்வாறான சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களை கடற்படையின் புலனாய்வு பிரிவு இயக்குநராகப் பணியாற்றிய இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டெனவின் அமர்வை சர்வதேச பிரதிநிதிகள் புறக்கணிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. 2008 — 2009 இல் 11 பேர் இலங்கை கடற்படையின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை குறித்து இலங்கையின் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ள உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா கடற்படையினர் மேற்கொண்ட குற்றங்களில் இது ஒரு சிறிய பகுதியே எனவும் தெரிவித்துள்ளார். கடற்படையினரின் பல முகாம்களில் இடம்பெற்ற சட்டவிரோதமாக தடுத்து வைத்தல், சித்திரவதைகள், காணாமற் போகச் செய்யப்படுதல் ஆகியவற்றுடன் கடற்படையின் பல தளபதிக்கு தொடர்புள்ளது அல்லது அவர்கள் அதனை அறிந்திருந்தனர் என தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா, இவர்கள் குறிப்பிட்ட முகாம்களில் தலைமை அதிகாரிகளாக விளங்கியதுடன், இந்த குற்றங்களில் ஈடுபடும் ஆதரவையும் வழங்கி இருந்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மாநாட்டை நடத்துபவர்களில் ஒருவரான இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டென 2011 முதல் 2013 வரை கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் இயக்குநராயிருந்தார் என தெரிவித்துள்ள சர்வதேச அமைப்பு, 2012 நடுப்பகுதி வரை குறிப்பிட்ட முகாமை கடற்படையின் புலனாய்வு பிரிவினர் இயங்கி வந்தனர். புலனாய்வு பிரிவின் இயக்குநர் என்ற அடிப்படையில் இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டென இது குறித்து தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளது. இலங்கை கடற்படையினருடன் கடல்சார் பாதுகாப்புக் குறித்த பேச்சுவார்த்தைகளிற்காக கொழும்பு செல்லும் உலக நாடுகளின் கடற்படை அதிகாரிகள் சர்வதேச நியாதிக்கத்தை கொண்ட சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்தில் தங்கள் நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதை மறந்து விடக்கூடாது எனவும் ஜஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை போன்ற நாடுகளால் மூடப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் வார இறுதி நாட்களில் மூடப்படவுள்ளதாக அதன் உத்தியோகப் பூர்வ டுவிட்டர் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடி காரணமாகவே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக டுவிட்டர் தள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வரவு செலவுத்திட்டத்திற்கு இந்த ஆண்டு உங்கள் நாடுகள் பங்களிப்பு செய்துள்ளதா என அந்த டுவிட்டர் தள செய்தியில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. 193 நாடுகள் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையில், 131 நாடுகளில் 34 நாடுகள் மாத்திரமே தமது முழுமையான தொகையை செலுத்தியுள்ளன. 97 நாடுகள் இன்றும் முழுமையான நிதித் தொகையை செலுத்தவில்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது. முழுமையான நிதித் தொகையை செலுத்தாத நாடுகள் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

நிராகரிக்கப்படும் கோரிக்கைகள்...

ஐந்து தமிழ் கட்சிகள் இணைந்து முன்வைத்த 13 அம்சக் கோரிக்கையை இரண்டு பிரதான சனாதிபதி வேட்பாளர்களும் நிராகரித்துவிட்டார்கள். தமிழ் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தாலும் கூட, அவை சனாதிபதி வேட்பாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்கும் என்பதே யதார்த்தமானது. சிங்கள வாக்குகளை இலக்குவைத்தே அவர்கள் செயற்படுகின்றார்கள். இந்த நிலையில் தமிழ் கட்சிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதோ, அவை குறித்துப் பேசுவதோ சிங்கள பகுதிகளில் தமக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அவர்களுக்கு தெரியும். பொதுஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படையாக கூறிவிட்டார். "தமிழ் கட்சிகள் தயாரித்துள்ள 13 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டேன். அதில் எந்த பயனும் இல்லை. யதார்த்தமாகவே பேசுவேன். இந்த 13 விடயங்களைப் பற்றித்தான் பேச வேண்டுமென்றால் அதற்காக நான் அவர்களை சந்திப்பதற்கே தயாராகவில்லை" என திட்டவட்டமாக கோத்தா கூறியிருக்கின்றார்.

தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையிலேயே கோத்தா இருக்கின்றார். 2010 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச தனிச்சிங்கள வாக்குளால் வெற்றிபெற்றார். அதேபோல தன்னுடைய வெற்றிக்கும் தமிழ் வாக்குகள் அவசியமில்லை என்பது கோத்தாவின் கணிப்பீடு. அவரது கணிப்பீட்டில் ஓரளவுக்கு உண்மையும் இருக்கின்றது. மறுபுறத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசகூட, இந்த கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இல்லை. அவர் இதனை வெளிப்படையாகச் சொல்லவில்லை. அனுராதபுரத்தில் பிரசாரக் கூட்டம் ஒன்றில், "யாரும் எனக்கு நிபந்தனைகள் விதிக்க முடியாது. யாருடைய நிபந்தனையை குறித்தும் அவர்களுடன் பேசுவதற்கே நான் தயாராகவில்லை" என தெரிவித்திருக்கின்றார். 13 அம்சக் கோரிக்கைக்கான பதிலாகவே இது கருதப்படுகிறது.

மற்றொரு சனாதிபதி வேட்பாளரான ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, இந்த கோரிக்கை குறித்து இதுவரையில் எந்த ஒரு கருத்தையும் கூறவில்லை. தேர்தலில் மூன்றாவதாக வரக்கூடியவராகக் கணிக்கப்படும் அனுரகுமார, இந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாது. இணைந்திருந்த வடக்கு—கிழக்கு மாகாணங்களைப் பிளவுபடுத்துவதில் பிரதான பாத்திரத்தை வகித்தது அவரது கட்சிதான். இதன் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை உயர்த்திக் கொண்ட ஜே.வி.பி, இப்போது தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றல்ல. தேர்தல் என்று வரும்போது சிங்கள பௌத்த வாக்கு வங்கிகளை பிரதான இலக்காகக் கொண்டுதான் சிங்கள அரசியல் தலைவர்கள் செய்யப்படுவார்கள். இலங்கையின் அரசியலில் இது சகஜம். கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலைமைகளையே நாம் கண்டுள்ளோம்.

அதனை, அடிப்படையாகக்கொண்டு எங்களுடைய திட்டங்களை நாங்கள் இராஜதந்திரமாக வகுத்துக்கொள்வது அவசியம். பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாகவும், பின்னர் பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து பேசுவது தொடர்பாகவும் தமிழ் கட்சிகள் முன்னெடுத்த செயற்பாடுகள் காலம் பிந்தியது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கிடையே கருத்து ஒருமைப்பாடும், செயற்பாடுகளில் ஒன்றிணைவும், எதிர்காலத்துக்கான திரிசனமும், இல்லாமைதான் இதற்குக் காரணம். தமது அன்றாட அரசியல் நலன்களுக்கு அப்பால், இனத்தின் நீண்டகால அரசியல் நலன்களின் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் செயற்படவில்லை.

தம்முடைய கோரிக்கைகள் தொடர்பிலும், பிரதான வேட்பாளர்கள் நிராகரிக்கும் பட்சத்தில் அடுத்தகட்டமாக என்ன செய்வது என்பதிலும் தமிழ் கட்சிகளுக்குத் தெளிவான கருத்து இருக்கவில்லை. தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது நிச்சயமாக ஒரு வேட்பாளரை ஆதரிப்பதாக முடியும். அதனால், அடுத்தகட்ட செயற்பாடுகளை எவ்வாறு வகுத்துக் கொள்வது என்பதில் உறுதியான நிலைப்பாடு தமிழ்க் கட்சிகளுக்கு அவசியம். வரலாற்றில் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது என்பதில் இராஜதந்திரமாகச் செயற்பட வேண்டிய வரலாற்றுக்கடமை தமிழ்க் கட்சிகளுக்கு உள்ளது. அதனை அவர்கள் செய்வார்களா?

- ஆசிரியர்

தமிழ் ஆட்சி மொழியானதற்கு விடுதலைப்புலிகளே மூலகாரணம்

சிறீலங்காவின் அமைச்சர் மனோகணேசன்

சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழியும் நிர்வாக மொழியாக மாற்ற மடைந்தமைக்கு விடுதலைப் புலிகளின் போராட்டமே காரணமென அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். வட தமிழீழம், யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் பலகைகளில் தமிழுக்கு முதலிடம் கொடுத்துள்ளமை தொடர்பாக இனவாத கருத்துக்கள் வெளியிடப்படுகின்றமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, "இலங்கையின் இன்றைய அரசியலமைப் பின்படி இலங்கையின் ஆட்சி மொழிகள், தேசிய மொழிகள் சிங்களமும், தமிழும் ஆகும். இணைப்பு மொழி ஆங்கிலம் ஆகும். சட்டப்படி சமமான ஆட்சித் தேசிய மொழிகள் என்பதற்காக பெயர்பலகைகளில் ஒன்றின் மீது ஒன்றை எழுத முடியாது. ஆகவே வரிசையாக எழுத வேண்டும். அதாவது வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்றும் எழுத வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு பிரதேச செயலக பிரிவில் அந்த மாகாணத்தில் பெரும்பான்மையோர் பேசுகின்ற மொழியை தவிர்ந்த அடுத்த மொழி பேசுபவர்கள் அதிகமாக வாழ்ந்தால் இந்த வரிசை மாறலாம். ஆனால் ஆங்கிலம் எப்போதும் மூன்றாம் இடத்திலேயே எழுதப்பட வேண்டும். இவ்வாறுதான் இலங்கை அரசியலமைப்பில் மொழி தொடர்பான 4ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் 1987 ஆம் ஆண்டு 13ஆம் திருத்தம் ஊடாக மாகாணசபைகளாக அதிகாரப்பகிர்வு வந்தது. அதனைத் தொடர்ந்து டிசம்பர் 1988 ஆம் ஆண்டு 16ம் திருத்தம் ஊடாக இந்நாட்டில் தமிழும் ஆட்சி மொழியாக மாறியது.

இவை இரண்டும் இலங்கை அரசியலமைப்பில் கொண்டுவரப்படுவதற்கு புலிகளின் போராட்டமே மூல காரணமாக இருந்தது. துணை காரணமாக இந்திய அரசு காணப்பட்டது. இன்றும் இந்த இரண்டு திருத்தங்களையும் காப்பாற்றி முன்நகர்த்த எம்மால் முடியும். அதை நோக்கியே நான் செயற்படுகிறேன். இந்த தெளிவு அனைத்து தமிழ் மக்களிடத்திலும் இருக்க வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

லசந்த கொலையில் விடுதலைப்புலிகளை சிக்கவைக்க முயற்சி

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையை திசைதிருப்ப, வவுனியாவில் இரண்டு வர்த்தகர்கள் கொல்லப்பட்டிருந்த அதிர்ச்சி தகவலை சி.ஐ.டி நேற்று நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியது. வர்த்தகர்களை கொன்றுவிட்டு, அவர்களின் மோட்டார் சைக்கிளை லசந்த கொல்லப்பட்ட இடத்தில் போட்டு, அந்த கொலையை புலிகளின் கணக்கில் சேர்க்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் சி.ஐ.டி அம்பலப்படுத்தியுள்ளது.

லசந்த கொலை விவகாரம் தொடர்பாக அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சி.ஐ.டி தாக்கல் செய்த அறிக்கையிலேயே இந்த அதிர்ச்சித் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

லசந்த விக்கிரமதுங்க கொலையை விடுதலைப்புலிகளின் கணக்கில் சேர்க்க சாட்சிகள் சோடிக்கப்பட்டிருந்தன. லசந்த கொலை நடந்த இடத்திற்கு அருகில் அட்டிட்டிய கால்வாய்க்கருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டதாகவும், கொலையாளிகள் பாவித்த மோட்டார் சைக்கிள் என்றும் வழக்கில் காவல் துறையரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், வழக்கை திசைதிருப்ப இந்த மோட்டார் சைக்கிள் அங்கு போடப்பட்டுள்ளது. நகை வர்த்தகர்கள் இருவர் செட்டிக்குளத்தில் கடத்தப்பட்டு, கொல்லப்பட்டு, அவர்களின் மோட்டார்சைக்கிளே அங்கு போடப்பட்டிருந்தது என சி.ஐ.டி தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2ம் பக்கத் தொடர்ச்சி... வெள்ளை...

கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்திற்கு வருவதற்கு துடித்துக்கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலாவது இவ்விடயம் தொடர்பில் தகவல்களை அறிந்தவர்கள் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என்றும் அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார் இதனைவிடவும், கோத்தாபய பதவியில் அமவர்வதற்கு முன்னதாகவே பொறுப்புக் கூறல் விடயத்தில் எதிர்மறையான கருத்துக்களை முன்வைக்கின்ற நிலையில் இவர் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தால் அனைத்து சாட்சியங்களையும் ஒழித்து பொறுப்புகூறல் நீதிப்பொறிமுறையே காணாமலாக்கப்படும் ஆபத்துள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். இவ்வளவு காலமும் தனே போரை நடத்தினேன் என்று பொறுப்பேற்று மார்பு தட்டிக்கொண்டிருந்த கோத்தபாய தற்போது அனைத்து விடயங்களையும் அறிந்திருந்தும் பொய்களையே வெளிப்படுத்துவதோடு அவருடைய பதிலளிப்பின்போதான உடல்பாவனைகள் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதையும் வெளிப்படுத்துவதாகவும் அனந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

2ம் பக்கத் தொடர்ச்சி... காணாமல்...

இதுதொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போது, 13,784 பேர் சரணடைந்ததாகவும், அவர்கள் அனைவரும் இரண்டு வருட காலப்பகுதிக்குள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

யுத்தத்தின்போது தாக்குதலுக்கு இலக்காகி அடையாளம் தெரியாத அளவிற்கு பலரது உடல்கள் சிதைந்து போனதாகவும், அவ்வாறு உடல் சிதைந்து உயிரிழந்தோரை அவர்களது உறவினர்கள் அடையாளம் காணாத நிலையிலேயே காணாமல் போனோர் தொடர்புகள் தொடர்பான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் கோத்தாபய தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளையில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வு பெற்ற முன்னாள் மேஜர் ஜெனரல் ரத்நாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில், 10,790 பேர் சரணடைந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கோத்தபாய தெரிவித்திருக்கும் கருத்துக்கும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்திருக்கும் கருத்துக்கும் இடையில் பாரிய முரண்பாடு உள்ளது. சுமார் மூவாயிரம் பேருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் கேள்வி எழுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வெளியாகிய சில காணொளிகளை அரசாங்கம் போலியானது என நிராகரித்து இருந்தது. அவ்வாறான காணொளியில் முக்கியமானது விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதியாக இருந்த கேணல் ரமேஷ் குறித்த காணொளி. ரமேஷ் தம்மிடம் சரணடையவில்லை என்று ராணுவம் தெரிவித்து இருந்தது. அது குறித்த காணொளி போலியானது எனவும் அரசாங்கம் சொன்னது.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அண்மையில் இது தொடர்பாக தெரிவித்துள்ள தகவல் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. யாழ்ப் பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோது ரனில் விக்கிரமசிங்க இது குறித்த சில தகவல்களை வெளியிட்டிருந்தார். கேணல் ரமேஷ் சரணடைந்தபோது அப்போது அமைச்சராக இருந்த எஸ்பி திசாநாயக்க, ரமேஷுடன் பேசியதாக ரணில் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பான உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ள வேண்டுமானால் கோத்தபாய, திசாநாயக்கவிடம் கேட்டுக் கொள்ளலாம் எனவும் ரனில் தெரிவித்திருந்தது கவனிக்கத்தக்கது.

முக்கியமான அமைச்சர் ஒருவர் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவருடன் பேசியிருக்கிறார் என்பதை பிரதமரே பகிரங்கமாக தெரிவிக்கும் நிலைமையில் அவ்வாறு ஒருவர் சரண் அடையவில்லை என இராணுவமோ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அப்போது இருந்த கோத்தபாய ராஜபக்சவோ மறுப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி இப்போது விடுகின்றது. ஆக, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் பல உண்மைகள் மறைக்கப்படுகின்றன என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் பொறுப்பு கூறப்பட வேண்டும் என்பது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு. இது குறித்த ஜெனீவா தீர்மானத்தை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருந்தது. ஐ.நாவை சமாளிப்பதற்காக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான செயலகம் ஒன்றை அரசாங்கம் அமைத்தது. ஆனால், அதுகூட அரசாங்கம் திணைக்களம் ஒன்றைப் போலவே செயற்படுகின்றது. அதன்மீது நம்பிக்கை வைக்க பாதிக்கப்பட்ட மக்கள் யாரும் தயாராகவில்லை.

இந்தப் பின்னணியில் இப்போது சனாதிபதி வேட்பாளர்கள் உட்பட பலரும் தெரிவித்துவரும் கருத்துகள், உண்மைகள் மூடிமறைக்கப்படப்போகின்றன என்பதையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதையுமே உணர்த்துகின்றது. சர்வதேசம் மௌனமாக இருப்பது அவர்களை மேலும் ஊக்குவிக்கும். இந்த நிலையில், உண்மைகளை வெளிக் கொண்டுவருவதில் சர்வதேசம் மீண்டும் உடனடியாகத் தலையிட்டு, இவ்விடயத்தில் ஆக்க பூர்வமாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்."

இவ்வாறு அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்திருக்கின்றது.

போர் வெற்றியை தனதாக்கும் கோத்தபாய பொறுப்புக்கூறலிலிருந்து விலகமுடியாது

பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய இருந்த காலத்தில் அவரை அறியாது தும்பும் அசையாத நிலைமையே இருந்தது. அத்துடன் போர்வெற்றியையும் தம் வெற்றியாக ஏற்றுக்கொள்ளும் கோத்தபாயவே காணாமலாக்கப்பட்ட வர்களுக்கும் பெறுப்புக்கூறவேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய செவ்வியில் அழுத்தமாக கூறியுள்ளார். அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு,

கேள்வி:- ஜெனீவா அரங்கும், சர்வதேசமும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் கொண்டிருக்கும் கரிசனை பற்றி உங்களது அனுபவம் எவ்வாறு உள்ளது?

பதில்:— நான் ஐக்கிய நடுகள் மனித உரிமை பேரவையின் கடந்த மார்ச் கூட்டத்தொடரில் பங்கேற்றது வரையில் நான்கு தடவைகள் அங்கு சென்றிருக்கின்றேன். இறுதியாக நடைபெற்ற செப்டம்பர் கூட்டத்தில் பங்கேற்கச் செல்லாதபோதும் எமது சொந்தங்கள் நால்வர் அங்கு சென்றிருந்தார்கள்.

இவ்வாறான நிலையில், இறுதியாக நான் பங்கேற்ற மார்ச் மாத கூட்டத்திற்கு பின்னர் ஐ.நாவுக்குச் செல்வதால் எமக்கு நன்மைகள் ஏற்படுமா? என்ற ஐயமும் எமக்குள் எழுந்துள்ளது.

காரணமென்னவெனில், போரின் போதும், அதற்கு பின்னரும் எமது உறவுகளை படையினரிடத்தில் கைளித்தமை, சரணடைந்தமை, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு மீளத் திரும்பாமை, வைத்தியசாலைகளில் வைத்து உறவுகள் கடத்தப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஐ.நாவின் பிரதான அரங்கிலே தெளிவாக கூறியுள்ளோம்.

எம்மிடம் அதற்கான சான்றாதாரங்கள் இருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம். அதற்கு மேலதிகமாக, ஐ.நா ஆணையாளர், சர்வதேச தரப்பினரிடத்திலும் தெளிவாக கூறினோம். இதற்கு மேலதிகமாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகம் நிறுவப்படுவதென்றால் கலந்தாலோசனை செயலணி அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளையும் உள்ளீர்த்தே மேற்கொள்ள வேண்டும் என்றும் 30.1 தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டள்ள போதும் அது கருத்திலெடுக்கப்படாது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையையும் சுட்டிக் காட்டினோம்.

இதனைவிடவும், சனாதிபதியும், அரசாங்கமும் வாக்குறுதிகளை அளித்தபோதும் அவை நிறைவேற்றப்படவில்லை என்றும் கூறியதோடு எமது பிரச்சினையை முன்னிலைப்படுத்தி தேர்தல் விஞ்ஞாபனங்கள் தயாரிக்கப்பட்டு ஆணை பெறப்பட்டாலும் பின்னர் அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்கும் செயற்பாடுகளையே மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்வதால் எமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் அவர்களின் முடிவுகள் அமையாது என்பதையும் ஐ.நா விடமும், சர்வதேசத்திடமும் கூறியுள்ளோம்.

ஆனால் இவற்றையெல்லாம் கடந்தே காணாமலாக்கப்பட்ட அலுவலகத்திற்கான செயற்பாடுகளை வேகப்படுத்துமாறு வலிறுத்திய ஐ.நா இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினையும் வழங்கியது. இதனால் நாம் மனமுடைந்த நிலையில் இருக்கின்றோம்.

கேள்வி:- அவ்வாறானால் இந்த விடயத்தினை அடுத்த கட்டம் எவ்வாறு கையாள முடியும் என்று கருதுகின்றீர்கள்?

பதில்:— காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வினை எட்டுவதென்றால் நிச்சயமாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கோ அல்லது விசேட தீர்ப்பாயத்திற்கோ விடயத்தினை முன்னகர்த்த வேண்டியுள்ளது. அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது இலகுவான விடயம் அல்ல. அதற்காக சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்களை கண்டறிந்து அணுக வேண்டியுள்ளது.

சாட்சியங்களை உள்ளடங்கிய ஆவணத் திரட்டல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான முன்னாயத்த நடவடிக்கைகளை உள்ளூர் மற்றும் புலம்பெயர் தரப்புக்களுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றோம்.

கேள்வி:- வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளையும் உள்ளீர்த்து ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் பொது நிபந்தனைகளை விதித்து பேச்சுவார்த்தைக்கு செல்கின்றமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்:— உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அனைத்து முஸ்லீம் கட்சிகளும் தமது சமூகம் சார்ந்து அரசாங்கத்தில் வகித்த பதவிகளை துறந்திருந்தார்கள். அவ்வாறான ஒற்றுமை அவர்கள் மத்தியில் இருந்தமையை நாம் அவதானித்திருந்தோம்.

அவ்வாறான நிலையில் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் பிரிந்து நின்று செயற்பட்டமையை கண்டு நாம் மிகுந்த கவலை அடைந்தோம். சிவில் அமைப்புக்கள் அவற்றை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை

> **கோத்தாவுக்குத் தெரியாமல் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்படவில்லை. அடித்துக் கூறுகிறார் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி**

முன்னெடுத்தபோதும் அம்முயற்சி முழுமையாக வெற்றியளித்திருக்காத நிலையில் தாயக பல்கலைக்கழக மாணவர்கள் முன்னின்று கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளை எடுத்திருந்தார்கள்.

அதில் ஒரு கட்சியானது வெளியேறிய நிலையில் ஏனைய ஐந்து கட்சிகளும் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன. ஒரு கட்சியானது வெளியேறியமைகூட எமக்கு கவலை அளிக்கின்றது. இருப்பினும் ஒன்றுபட்டுள்ள கட்சிகள் ஒற்றுமையான விடயங்களை கையாள வேண்டும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதோடு பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சிகளுக்கும், ஒத்துழைப்புக்களுக்கும் நாம் நன்றி கூறக் தலைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

கேள்வி:- சனாதிபதித் தேர்தல் களத்தில் உள்ள வேட்பாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றீர்களா?

பதில்:— தற்போது தமிழர் தரப்பு ஒன்றிணைந்து கோரிக்கைகளை முன்வைக்கின்றது. எனினும் தமது சிங்கள, பௌத்த மேலாதிக்க சிந்தனையும், தென்னிலங்கை வாக்கு வங்கியும் சரிந்துவிடக்கூடாது என்பதற்காக இவற்றை களத்தில் உள்ள வேட்பாளர்கள் ஏற்பதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவாகவே உள்ளன.

இருப்பினும் தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து கோரிக்கைகளை

தென்னிலங்கையிடத்தில் முன்வைத்து நடத்துகின்ற பேச்சுவார்த்தைகள் மூலம் தென்னிலங்கை தலைவர்கள் தமிழர்களுக்கு எதனையுமே தருவதற்கு மறுக்கின்றார்கள் என்ற செய்தியை தெளிவாக மீண்டுமொருமுறை கூறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். அதுவே எமது விடுதலைக்கான பயணத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் வாய்ப்புக்களை உருவாக்கும் என்று கருதலாம். இந்த விடயத்தினை நேர்மையாக கொண்டு செல்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களும் தொடர்ந்தும் பங்குதாரர்களாக இருந்து சமூகத்திற்கான விடயங்களில் முழுமையான ஒத்துழைப்புக்களைச் சிவில் சமூகத்துடன் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்கின்றோம்.

கேள்வி:- வலிந்து காணாமாலாக்கப்பட்டவர்கள் குறித்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், தற்போதைய சனாதிபதி வேட்பாளருமான கோத்தாபய ராஜபக்ச வெளியிட்டுள்ள கருத்துக்களை எவ்வாறு பார்கின்றீர்கள்?

பதில்:— கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக இருக்கும் போது எவ்வாறு

தொடர்ச்சி 11ம் பக்கம்..

ஐந்து கட்சிகளது ஐக்கியத்திற்குப் பின்னர் அடுத்தது என்ன?

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் தமிழரின் அரசியலில் அதிகமான மாற்றங்களை ஏற்படுத்த வைத்துள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் கட்சிகள் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் பல நிகழ்ந்துள்ளன. அத்துடன் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகள் மீண்டும் ஒருதடவை தென் இலங்கை அரசியல் தலைமைகளுக்கு உணர்த்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் புவிசார் அரசியல் பயனாளிகளுக்கும் தமிழரது அரசியல் அபிலாசைகளை உணர்த்தும் செயல்பாடுகளும் நிகழ்ந்துள்ளன. ஆனால் அதன் ஐக்கியத்தில் ஐந்து கட்சிகளை மட்டுமே ஒன்றிணைக்க முடிந்தது என்பது தமிழரது அரசியல் துரதிஸ்டமேயாகும். இக்கட்டுரையும் ஐந்து கட்சிகளது ஒன்றிணைவுக்கு பின் அடுத்தது என்ன என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

தமிழ் தேசியத்தின் பால் தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி ஒன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் மேற்கொண்டனர். இந்த ஒன்றிணைப்புக்கு பின்னால் 2020 சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பது குறித்தும், பிரதான வேட்பாளரது தமிழரை கருத்தில் கொள்ளாத போக்கும், கடந்த தேர்தலில் தமிழரது ஆணையை தற்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியது குறித்தும் கவனத்தில் எடுக்கப்பட்டது.

இதற்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீன குழுவின் பொதுவேட்பாளர் நிறுத்தப்படுவதற்கான முயற்சி சாத்தியமற்றதன் அடுத்த கட்டமாகவே ஐக்கியப்படுத்தல் நிகழ்ந்துள்ளது. 2002 இல் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய நகர்வுக்குப் பின்பு பல்கலைக்கழக மாணவர்களது முயற்சி வெற்றிகரமான செயற்பாடாக அமைந்துள்ளது.

முதலாவது ஐந்து கட்சிகளது ஒன்றிணைவில் முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கையும் பிரதான சனாதிபதி வேட்பாளர் இருவருக்கோ அல்லது மூவருக்கோ கையளித்து அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வது பற்றிய முடிவுகளைப் பொறுத்து தீர்மானம் ஒன்றை நோக்கி நகர்வதாக திட்டமிடப்பட்டது. இதனை எதாவது ஒரு வேட்பாளர் ஏற்றுக் கொண்டால் சிங்கள பெரும்பான்மை வாக்காளர்கள் அவரை நிராகரித்து விடுவார்கள் என்ற வாதமும் தவிர்க்க முடியாத விடயமாக பரிசீலிக்கப்பட்டது. ஆனால் தென் இலங்கை பெரும்பான்மை வாக்காளரை தமிழர் பிரச்சினை பொறுத்து திருப்திப்பத்த முடியாத வேட்பாளர் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுதரமுடியாது என்ற தர்க்கத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இருவேட்பாளரும் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் வேறு தெரிவை நோக்கி தமிழ் மக்கள் செல்வதே பொருத்தமானதாக அமையும். ஆனால் ஏதாவது ஒரு வெற்றி பெறும் வேட்பாளர் தமிழ் தரப்பு முன்வைத்த கோரிக்கையில் அறுபது சதவீதத்தை ஏற்றுக் கொள்வதாக முடிவானால் அந்த வேட்பாளரை நோக்கி தமிழ் மக்கள் வாக்களிப்பது என்பதுவும் விவாதப் பொருளாகக் கொள்ளப்பட்டது. காரணம் எந்த உரையாடலிலும் நூறு சதவீதம் சாத்தியமாகப்போவதில்லை. ஐம்பது சதவீதத்தை கடந்தாலே அந்த விடயம் அங்கீகரிக்கப்பட்டதாகவே கொள்ளப்படுவதுண்டு.

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்
யாழ்.பல்கலைக்கழகம்

இரண்டாவது அவ்வாறு எந்த வேட்பாளரும் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் தேர்தலை பகிஸ்கரிப்பது என்ற விவாதம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதனை முழுமையாக செயல்படுத்த முடியுமா? என்பது மட்டுமல்ல 2005 இல் நிகழ்த்தியது போன்றதல்ல தற்போதைய தேர்தல் புறக்கணிப்பு என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அப்போது பலமான ஆயுதப் போராட்டம் இருந்தது அதனால் ஒரு புவிசார் அரசியல் களத்தை கையாளுவதற்கான வாய்ப்பு ஒன்று இருந்தது. ஆனாலும் அந்த முடிவு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததில் கணிசமான செல்வாக்கு செலுத்தியதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறான நிலைக்குள் தமிழ்மக்கள் மீண்டும் செல்லுவது ஆரோக்கியமானதாக அமையாது. இது புவிசார் இலாபங்களைக் கொண்டுள்ள சக்திகளுக்கு வெறுப்பூட்டும் விடயமாக அமையும். எல்லோரையும் பகைப்பதனால் எந்த விடயத்தையும் சாதித்துவிட முடியாது.

தமிழ் அரசியல் தலைமைகள் தமது இருப்புக்காக தமிழ் மக்களுக்கு என்றும் எதிரிகளை உருவாக்குவதில் ஈடுபடாது இருப்பது அவசியமானது. எல்லா அரசுகளும் தமது நலனுக்குள்ளேயே பயணிக்கின்றன. தமிழர் மட்டும் தொடர்ந்து பலியிடப்படுகிறார்கள். ஆனால் தமிழர் கூட்டாக தேர்தலை பகிஸ்கரிக்க முடியுமா என்பதே முக்கியமான விடயம். தேசியக்கட்சிகளிடம் சரணடைந்துள்ள வாக்காளர் ஒருபுறம், மறுபக்கத்தில் தமிழ் தேசிய நிலைப்பாட்டிலுள்ள சக்திகளிடம் காணப்படும் பலவீனமான நிலை என்பதுடன் கிழக்கு மாகாண மக்கள் வாக்களித்தே ஆகவேண்டும் என்ற நிலை, அனைத்தும் பகிஸ்கரிப்பினை ஆபத்தானதாக்கும்.

மூன்றாவது பொது வேட்பாளர் ஒருவர் சாத்தியப்படாதபோது சிவாஜிலிங்கம் என்ற வேட்பாளர் தன்னை பொது வேட்பாளராக அறிவித்து வருகிறார். ஆனால் எல்லாத் தமிழ்க் கட்சியும் சிவாஜிலிங்கத்தினை ஒரு வேட்பாளராக ஏற்றுக் கொள்ளாத போது அத்தகைய அறிவிப்பு பொருத்தமான முடிவைத் தராது. அதேநேரம் பொதுவேட்பாளர் எனும் தெரிவில் திட்டமிடப்பட்ட விடயமாக தமிழ் மக்களுடன் வெளிப்படுத்தப்படாத ஒரு உடன்பாட்டை அந்த பொதுவேட்பாளர் ஏற்படுத்த வேண்டும் என்ற வாதம் அனைத்து கட்சிகளுடனும் உரையாடும்போது முன்வைக்கப்பட்ட விடயமாகும். அதாவது பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் அவர் சார்பில் பெரும்பான்மை வெற்றிபெறும் வேட்பாளருடன் ஓர் உடன்பாட்டுக்கு செல்வதுடன் இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவை அவ்வேட்பாளருக்கே வழங்குவதெனத் திட்டமிடப்பட்டது.

ஆனால் சிவாஜிலிங்கம் அவர்களை தமிழ் வாக்குகள் வேண்டப்படாத பலர் அணுகுவதாகவும், அவரை முன்னிலைப்படுத்த உரையாடிவருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளது. அது எதற்காகவெனில் தமிழ் மக்களில் குறிப்பிட்ட வாக்குகள் சிவாஜிலிங்கத்திற்கு வழங்குவதன் மூலம் தென் இலங்கையில் ஒரு வேட்பாளரை இலகுவில் வெற்றி பெறச் செய்யலாம் என்பதாகும். இதில் சிவாஜிலிங்கம் அவர்கள் மிகத் தெளிவாக தமிழ் தேசியத்தின் பால் செயற்படுவதுடன் இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவை யாருக்கு அளிக்க வேண்டும் என்ற உரையாடலை தென் இலங்கை பிரதான வேட்பாளர் ஒருவருடன் உரையாடிச் செயற்படுவதே ஆரோக்கியமானது. அதற்கான அறிவிப்பினை அவரே முன்வைத்து வருகிறார். ஆனால் செயற்பாட்டில் தவறான புரிதலை நோக்கி நகராது இருப்பது அவசியமானது. நான்காவது மேற்குறித்த எந்த விடயமும் சாத்தியப்படாத போது தமிழ் மக்களது வாக்களிப்பு முடிவை விருப்புக்கும், உடன்பாட்டுக்கும் விட்டுவிடுவதாகும். காரணம் தமிழ் தேசியத்தின் நிலையில் தமிழ் மக்கள் செயற்படும் இயல்பு கொண்டவர்கள்.

அதே நேரம் தமிழ் கட்சிகளாலும், பொது அமைப்புக்களாலும் சரியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு அது வெற்றிகரமாக அடையப்படாத சந்தர்ப்பத்தில் அது தமிழ் மக்களை குழப்புவதாக அமையும். அதாவது ஒரு இலட்சியத்திற்காக தமிழர் வாக்களிக்க வேண்டுமாயின் அந்த இலட்சியம் அடையப்பட வேண்டும். அது அடையப்படாத போது வாக்களிக்கும் உரிமையை மக்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதாவது ஒரு தரப்பு சிவாஜிலிங்கத்தையும், இன்னொரு தரப்பு பகிஸ்கரியுங்கள் என்றும், இன்னோர் தரப்பு ஒரு தேசியக் கட்சிக்கு வாக்களிக்க கோருவதும் சரியான அணுகுமுறையாக அமையாது.

எல்லோரும் ஒன்றித்து முடிவினை எடுத்து அதன்படி ஒழுகுதல் வேண்டும். அதுவே பயனுள்ள விளைவைத் தரும். இது சில சந்தர்ப்பத்தில் ஒரு அரசியல் கட்சிக்கு பொருத்தமில்லாத வாதமாக அமையலாம்.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

சிறீலங்கா அரச தலைவர் தேர்தல் தமிழ் மக்கள் தனித்தன்மையைப் பேணவேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

சிறீலங்காவின் எட்டாவது அரச தலைவர் தேர்தல் பிரச்சாரங்கள் தென்னிலங்கையில் சூடுபிடித்துள்ள போதிலும், தமிழர் தரப்பு மிகவும் ஒரு குழப்பமான நிலையிலேயே உள்ளது. அதாவது முழுக்க முழுக்க சிங்கள தேசத்துக்கான இந்த தேர்தலில் தமிழ் மக்கள் பங்குபற்றுவதன் மூலம் என்ன பயனைப் பெற்றுவிட முடியும் என்பதே தமிழ் மக்களிடம் எழுந்துள்ள தற்போதைய மில்லியன் டொலர் கேள்வி. அதாவது இதற்கு முன்னைய தேர்தல்களில் வாக்களித்த தமிழ் மக்களுக்கு சிங்கள தேசத்தின் அரசியல் தலைவர்கள் எந்த நன்மையையும் செய்துவிடவில்லை.

மாறாக திட்டமிட்ட இனஅழிப்பு, நில அபகரிப்பு, தமிழ் மக்களின் கலாச்சாரங்களை சீரழிக்கும் நிகழ்வுகள், தமிழ் மக்களின் பிரதேசங்களில் தொடர்ந்து தங்கியிருக்கும் சிறீலங்கா படையினர், அவர்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், சிங்களக் குடியேற்றங்கள், சட்டவிரோதமாக நிறுவப்படும் பௌத்த ஆலயங்கள், அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்த மற்றும் தமிழ் பெண்களை மானபங்கப்படுத்தி தண்டனை பெற்ற படையினரை விடுவித்தல், தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்தும் தடுத்துவைத்து துன்புறுத்துதல், போரின் போது இனஅழிப்பில் ஈடுபட்ட படை அதிகாரிகளைக் காப்பாற்றுதல், மனித உரிமை மீறல்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை மேற்கொண்ட படையினரைக் காப்பாற்றுதல் என தொடர்ந்து ஆட்சிக்கு வந்த சிறீலங்கா அரசுகளின் தமிழின விரோதப் போக்கிலும், அவர்களின் மனநிலையிலும் எந்த மாற்றங்களும் இதுவரையிலும் ஏற்படவில்லை.

தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் அவர்களுக்கு ஆதரவுகளை வழங்கி பல தடவை அவர்களை நெருக்கடிகளில் இருந்து காப்பாற்றிய போதும் அவர்கள் மாறவில்லை என்பதை விட அவர்கள் தமது கொள்கைகளை மாற்றவில்லை. அது மட்டுமல்லாது இந்திய மற்றும் மேற்குலகத்தின் நலன்களை முதன்மைப்படுத்துவதன் மூலம் அதன் ஊடாக மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் மூலம் தமிழ் இனம் தனக்குரிய உரிமைகளையும், நீதியையும் பெற்றுவிட முடியும் என மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியையே சந்தித்துள்ள என்று கூறலாம் அல்லது தமிழ் மக்கள் இந்த வல்லாதிக்க சக்திகளால் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றனர் எனக் கூறலாம்.

எனவே தான் இந்த தேர்தலில் இருந்து தமிழினம் தனது தனித்துவத்தைப் பேணி சிங்கள தேசத்தில் இருந்து தன்னைத் தனிமைப் படுத்தி தனக்கென ஒரு அடையாளத்தை பேணவேண்டும் என்ற கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது. அதனையே நாம் தேர்தல் புறக்கணிப்பு எனக் கூறுகின்றோம். ஆனால் தேர்தல் புறக்கணிப்பு என்பது வாக்களிக்கும் நிலையங்களுக்கு செல்லாமல் விடுவது ஒரு முறையாக இருக்கும் போதும், இனவாதக் கட்சிகளின் இரு பெரும் தலைவர்கள் உட்பட தென்னிலங்கை பெரும்பான்மைச் சிங்களவர்களைப் புறக்கணித்து தமிழர் ஒருவருக்கு வாக்களிப்பதும் தேர்தல் புறக்கணிப்பாகவே கொள்ளப்படும்.

ஏனெனில் 74 சதவிகிதற்திற்கும் மேற்பட்ட சிங்களவர்களைக் கொண்ட நாட்டில் தமிழர் ஒருவருக்கு அளிக்கப்படும் வாக்குகள் மூலம் அவர் அரச தலைவர் ஆக முடியாது என்பதை உலகம் மட்டுமல்ல தமிழ் மக்களும் நன்கு அறிவார்கள். ஆனால் சிங்கள இன மக்களுக்கு ஒரு நீதி, தமிழ் இன மக்களுக்கு ஒரு நீதி என்று ஆட்சி நடைபெறும் நாட்டில் தமிழ் மக்கள் தனித்து இயங்குவதே தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானதாக அமையும் என்பதே பலரது கருத்தாக உள்ளது.

அனைத்துலக மட்டத்தில் நல்ல உறவுகளைப் பேணும் ஒருவரை தென்னிலங்கையில் அரச தலைவராக்கி அவரின் மூலம் சிங்கள மக்களும், சிங்களப் படையினரும் உல்லாசமான வாழ்க்கை வாழ்வதற்கு தமிழ் மக்கள் தமது உரிமைகளை தியாகம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்பதே அவர்களின் கருத்து. எமது எதிரிக்கு நெருக்கடிகள் குறைந்து அவன் சுதந்திரமாகச் செயற்படும் போதுதான் ஏனைய இனங்களுக்கு அவன் பேரழிவை ஏற்படுத்தும் திட்டங்களை வகுக்க முடியும். ஆனால் நாம் எப்போதும் எமது எதிரியையும், அவனது மக்களையும் நெருக்கடிக்குள் வைத்திருப்போமானால் நாம் அவனுக்கு பேரழிவை ஏற்படுத்த தேவையான திட்டங்களை வகுக்க முடியும்.

மகிந்த ராஜபக்ச அரசுடன் தமிழினம் நேரடியாக மோதிக் கொண்டது, போரின் போது மிகப்பெரும் இன அழிப்பை அவர்கள் மேற்கொண்டனர், அதற்கு பிராந்திய வல்லரசுகளும், உலக வல்லரசுகளும் உதவிகளை வழங்கின. 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னரும் திட்டமிட்ட இன அழிப்பை அவர்கள் தொடர்ந்தனர். ஆனால் அதன் பின்னர் வந்த ரணில் மற்றும் மைத்திரிபால சிறிசேன அரசுகள் கூட மகிந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்களை நிறுத்தவில்லை. எதிலும் மாற்றம் இடம்பெறவில்லை. எனவே ஒருவரை இனப்படுகொலையாளி என்பதன் மூலம் ஏனைய சிங்களத் தலைவர்களின் கைகளில் மறைந்துள்ள குருதிக்கறைகளை தமிழ் மக்கள் கழுவ வேண்டிய தேவை— யில்லை. அவ்வாறு நாம் செய்வது கூட எமக்கு நன்மை பயக்காது, மாறாக உலக அரங்கில் அங்கீகாரம் பெற்ற ஒருவர் பதவியில் அமருவதன் மூலம் சிங்கள இனம் சுகபோகங்களை அனுபவிப்பதுடன், அவர்கள் தமது இனஅழிப்பையும் தொடரவே செய்வார்கள்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அவர்களும் இனவாதத்திற்குள் மூழ்கிப்போனவர்களே. இங்கு ஒவ்வொரு கட்சிகள் செய்த இன அழிப்புக்களையும் கூறுவதாக இருந்தால் இந்த பத்தியில் இடம்போதாது. ஆனால் சிறு உதாரணமாக இந்திய— இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் இனம் பெற்றுக்கொண்ட மிகச் சிறு நன்மை என்பது 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கும், கிழக்குமே, ஆனால் அதனைப் பிரிப்பதில் முன்னின்று செயற்பட்டது ஜே.வி.பி என்பதை நாம் மறந்துவிட முடியாது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்த இந்தியாவே தனது படையினரின் மூலம் பல ஆயிரம் தமிழ் மக்களைப் படுகொலை செய்த பின்னரே அதனை எமக்கு விட்டுச் சென்றது. அதாவது சிறீலங்காவில் ஆட்சிக்கு வரும் எந்த அரச தலைவரும், இனப்படுகொலையில் ஈடுபட்ட தமது படையினர் தண்டிக்கப்படுவதை விரும்பப்போவதில்லை. அதனை தான் சஜித் பிரேமதேசவும், கோத்தபாய ராஜபக்சவும் தென்னிலங்கையில் மேற்கொண்ட தமது பிரச்சாரக் கூட்டங்களில் தெரிவித்துள்ளனர்.

அதாவது அனைத்துலக சமூகம் நேரடியாகத் தலையிடாத வரையிலும் தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியையும், தமது உரிமைகளையும் பெற்றுவிட முடியாது. அதனை நாம் கடந்த காலங்களில் பட்ட அனுபவங்களின் மூலம் நன்கு தெரிந்து கொண்டுள்ளோம்.

அனைத்துலக சமூகமோ அல்லது மேற்குலகமோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ சிறீலங்கா மீது ஒரு அழுத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றால் இனங்களுக்கு இடையிலான முனைவாக்கம் விரிவாக்கம் பெறவேண்டும். அதற்கு நாம் எமது செயற்திட்டங்களில் பிரிந்து வாழ்கின்றோம் என்பதை உணர்த்த வேண்டும். அதுவே அரச தலைவர் தேர்தல் புறக்கணிப்பின் அடிப்படை எண்ணக் கருவாகும்.

சிங்கள தேசத்துடன் இணைந்து, அவர்களுடன் கலந்து வாழ்ந்து, முழுக்க முழுக்க சிங்கள தேசத்துக்கான தேர்தலில் பங்கெடுத்து, நல்லதொரு சிங்களத் தலைவரை சிங்கள இனத்திற்கு தெரிவுசெய்து கொடுத்துவிட்டு நாம் பிரிந்து வாழ்கின்றோம், தமிழ் இனம் தனித்தன்மையையும், தன்னாட்சிக் கோட்பாட்டுடன் வாழ்கின்றது என நாம் கூறுவோமாக இருந்தால் எம்மை இந்த அகிலம் கேலியாகவோ அல்லது பரிதாபத்திற் குரியவர்களாகவோதான் பார்க்கும்.

அமெரிக்கா ஏன் கோத்தாவை தடுக்கவில்லை?

மு.திருநாவுக்கரசு

நடைபெறவுள்ள இலங்கை சனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச சனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு அவரது அமெரிக்க குடியுரிமை தடையாக இருந்தது. இந்நிலையில் அவர் தனது குடியுரிமையை அமெரிக்க அரசிடம் இரத்துச் செய்ய விண்ணப்பித்து அதன்படி தனது குடியுரிமையை ரத்து செய்துகொண்டார்.

சீன சார்பாளரான கோத்தபாயவை சனாதிபதியாக வரவிடாமல் தடுப்பதற்கேற்ற வகையில் அவரது அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்யாமல் விடுவதற்கான காரணங்கள் அமெரிக்காவுக்கு இருந்தன. முதலாவதாக அமெரிக்க நீதிமன்றங்களில் அவருக்கு எதிரான குற்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் சனாதிபதித் தேர்தலில் நியமனப் பத்திரத்திரம் தாக்கல் செய்வதற்கான திகதியை தாண்டும் வகையில் அவரது குடியுரிமை இரத்துக்கான விண்ணப்பத்தைக் காலதாமதப் படுத்துவதற்கேற்ற சிவப்பு நாடா தடைகள் நிர்வாக ஒழுங்கில் இருப்பது இயல்பு.

ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி ஓர் அப்பட்டமான போர்க் குற்றவாளியாகக் கருதப்படும் கோத்தபாய, சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பாக அவரது அமெரிக்க குடியுரிமையை அமெரிக்க அரசுத்து செய்ததற்குப் பின்னால் அமெரிக்க அரசுக்கும் கோத்தபாயவுக்குமிடையே ஏதாவது இரகசிய உடன்படிக்கைகள் இருக்கலாம் என்ற ஊகங்கள் பெரிதாக எழுந்துள்ளன. சீன சார்பு நிலை—யிலிருந்து கோத்தப்பா யாவை அமெரிக்க சார்பு நிலைக்கு திருப்புவது அனேகமாக சாத்தியப்பட முடியாது. "கம்பளி மூட்டையை பூசாரி கைவிட்டாலும் கம்பளி மூட்டையாக காட்சியளித்த கரடி பூசாரியைக் கைவிடாது" என்பதற்கிணங்க சீனாவை கோத்தபாய கைவிட்டாலும் கோத்தபாயவை சீன றகன் கைவிடாது. மேலும் சீன— ராஜபக்ச குடும்ப அரசியல் உறவு இயற்கையான கூட்டைக் கொண்டது.

இந்துமாக்கடலில் இலங்கையின் கேந்திர அமைவிட முக்கியத்துவம் கருதி முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு கடந்த சில ஆண்டுகளாக இலங்கைக்கான அரசியல் முக்கியத்துவம் அதிகம் சூடுபிடித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் பார்வை இலங்கை மீது அதிகம் உன்னிப்பானதாக அமைந்திருக்கும். தரையில் ஊரும் எறும்பைக்கூடப் பார்க்கக்கூடிய தனது கழுகுக் கண்கொண்ட புலனாய்வுப் பார்வையை இலங்கை மீது அமெரிக்கா முழுமையாக திருப்பி இருக்கும். இந்நிலையில் நடைபெற இருக்கும் தேர்தல் பற்றிய கணிப்பீடு அமெரிக்காவின் கையில் துல்லியமாகக் காணப்படும்.

இங்கு வெறுமனே ஒரு கோத்தபாயவை மட்டும் பார்க்க முடியாது. ராஜபக்ச குடும்பம் முழுவதையுமே கணக்கிலெடுத்துக் கணிப்பீடு செய்ய வேண்டும் என்ற உண்மை

அமெரிக்காவுக்கு நூறு வீதம் புரியும். ஒரு கோத்தபாயவை தடுத்து நிறுத்தினாலும் ராஜபக்ச குடும்பத்தில் மேலும் நான்கு பலமான சனாதிபதி வேட்பாளர்கள் உண்டு. எனவே ஒரு கோத்தபாயவை தடுப்பதில் பயனில்லை. ராஜபக்ச குடும்பத்தில் ஒரு மஹிந்த ராஜபக்சவை தவிர திருமதி ஷிராணி மஹிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச என குடும்பத்தின் அரசியல் வாரிசுகளின் இந்த பட்டியல் நீள்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அச்சத்துக்கு உரியதாக காணப்பட்ட, 30 ஆண்டுகளாய் சிங்களத் தலைவர்கள் யாராலும் வெல்லப்பட முடியாததாக காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்தில் வீழ்த்தியவர்கள் என்கின்ற வெற்றி வீரர்களுக்கு உரிய மகுடம் ராஜபக்ச குடும்பத்தினருக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரிதாக உண்டு. அத்துடன் கடந்த சனாதிபதி தேர்தலின் போதும் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த ராஜபக்சவுக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன என்பதும் கவனத்துக்குரியது. இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்க அமெரிக்க நிர்வாகம் தவறாது.

மேலும் மஹிந்த ராஜபக்சவால் சனாதிபதித் தேர்தலில் சட்டப்படி போட்டியிட முடியாதேயானாலும் அவர் தொடர்ந்தும் பெரும் தலைவராக விளங்குகிறார். அத்துடன் அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ளார். மேலும் அவர் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பிரதமராகவும் வரமுடியும். இப்பின்னணியில் கோத்தபாயவை சனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் தடுப்பதான எத்தகைய ஏற்பாடுகளும் நடைமுறையில் பயனற்றவை. இத்தகைய மிக எளிமையான உண்மையை மாபெரும் உலக வல்லரசான அமெரிக்காவால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்க முடியும் என்று யாராவது கற்பனை செய்வது தவறு.

இன்னிலையில் கோத்தபாய சமர்ப் பித்திருந்த அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்வதற்கான அவரது விண்ணப்பத்தை தடுக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருந்திருக்க மாட்டாது. இதனை மேலும் விளக்கமாக பார்ப்போம். தமக்கு வெற்றி வாய்ப்பிருப்பதாகக் கருதி 1957ஆம் ஆண்டு நடக்கவிருந்த நாடாளுமன்றத்திற்கான தேர்தல்களை ஓர் ஆண்டு முன்கூட்டியே 1956ஆம் ஆண்டு சேர். ஜோன் கொத்தலாவலை தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் நடத்தியது. அப்போது அமெரிக்க அறிஞரான ஹவார்டு றிகின்ஸ் (Haward Wriggins) அத்தேர்தல் பற்றி முன்கூட்டியே துல்லியமாக கணிப்பு செய்திருந்தார்.

அதாவது நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி—யினர் ஒற்றைத் தானத் திற்கு மேல் வெற்றிபெற முடியாது என்று தெளிவாகக் கூறியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி—யினர்களின் கணிப்பையும் மீறி றிகின்ஸ் கூறியவாறு ஒற்றைத் தானமான வெறும் 8 தொகுதிகளில் மட்டுமே ஐ.தே.க வெற்றிபெற முடிந்தது. பின்நாட்களில் றிகின்ஸ் இலங்கைக்கான அமெரிக்க தூதராக பணியாற்றினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மிக்கயல் கொர்ப்பச்சேவ் (Mikhail Gorbachev) சோவியத் சனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு முன்னமே அதாவது 1984ஆம் ஆண்டு அமெரிக்க அறிஞரான கென்னடி என்பவர் பேர்லின் சுவர் தகரும் என்று ஆறு ஆண்டுகளுக்கு முன்பே எதிர்வு கூறினார். இத்தகைய பலமான அறிவியல் பாரம்பரியமும், அறிவியற் பலமும் அமெரிக்காவிற்கு உண்டு. எனவே இலங்கை விடயம் பற்றி அதிகம் விழிப்படைந்து இருக்கும் அமெரிக்காவால் இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் பற்றிச் சரியாகக் கணிக்கக் கூடிய ஆளுமை உண்டு. இத்தகைய பின்னணியை வைத்துத்தான் கோத்தபாய பற்றிய அமெரிக்காவின் கணிப்பை புரிந்து கொள்ள வேண்டும்.

ராஜபக்ச குடும்பத்தில் இருந்து போர்க்குற்றவாளிகள் அல்லாத யாராவது ஜனாபதியாக பதவிக்கு வருவதை விடவும் போர்க்குற்றவாளியாக விரல் நீட்டப்படும் கோத்தபாய சனாதிபதியாக வந்தால் அவரை அவரது குடும்பியில் பிடிப்பது அமெரிக்காவுக்கு இலகுவாக அமையும். இந்தவகையில், அதுவும் ஐதேகவின் வெற்றி வாய்ப்புக்கள் பெரிதும் அரிதாக ஒரு பின்னணியில், பெரிதும் பிரச்சனைக்குரிய ஒருவரான கோத்தபாய சனாதிபதியாக பதவிக்கு வருவது அமெரிக்காவின் தேவைக்கேற்ப அவரையும், இலங்கை

தொடர்ச்சி 11ம் பக்கம்..

ஐந்து தமிழ்க் கட்சிகளின் இணைவு

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட திட்டமிட்ட இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணையை வலியறுத்தி நீதிக்காக காத்திருக்கும் 2009இன் பின்னரான இந்த பத்தாண்டுகளில் இலங்கை பௌத்த சிங்களப் பேரினவாத அரசு நீதிக்கான கதவுகளை மூடி தமிழர் தாயகத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் மிகவும் தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

இன வழிப்பிற்கு எவ்வாறு நீதியை பெற்றுக் கொள்வது, தற்போது தீவிரம் பெற்றுள்ள கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பை எவ்வாறு தடுப்பது என்ற ஆயிரம் கேள்விகள் தமிழினத்தின் முன்னால் எழுந்தது. காரணம் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அரியாசனம் ஏறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுடன் இரண்டறக் கலந்துவிட்டது. அதேவேளை தமிழ்த் தேசியம் என்ற கோசத்துடன் பயணித்த ஏனையை கட்சிகளும் தமிழ் மக்களின் உரிமைக்காக சில பணிகளை முன்னெடுத்தாலும் போராட்டக்களத்திலும், அரசியல் தளத்திலும் காத்திரமான பணிகளை முன்னெடுக்கவில்லை என்ற

பெரும் கவலை தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தது. இந்நிலையில் தாயகத்திலே சிவில் அமைப்புக்களின் தோற்றங்களும், பல்கலைக் கழக மாணவர்களின் எழுச்சியும் தாயகத்தில் உள்ள தமிழர்கள் மத்தியிலும், புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் புது நம்பிக்கையினைக் கட்டியெழுப்பியது. இவ்வாறான சூழலில் சனாதிபதித் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் தாயகத் தமிழர்களின் வகிபாகம் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்றன. இதன் முதலங்கமாக சிவில், மத, பிரதிநிதிகளை உள்ளடக்கிய சுயாதீன குழுவினரால் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான கருத்தியல் நகர்வினை முன்னெடுத்திருந்தார்கள். இருப்பினும் அந்த முயற்சியை சரியான திட்டமிடல் மற்றும் அதற்கான காலம் முன்னுணரப் படாமல் மேற்கொள்ளப் பட்டதால் கால அவகாசம் போதாமையினால் அடுத்தகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன.

களத்தில் இறங்கிய பல்கலைக்கழக மாணவர் சமூகம்

குறிப்பாக, அந்த முயற்சியை வடக்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டாக இணைந்து முன்னெடுத்தனர். அதாவது, தமிழ்த் தேசியப்பரப்பில் பயணிக்கும் அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைப்பதும், சனாதிபதித் தேர்தலில் வலு விழந்திருக்கும் தமிழர் தரப்பு பேரம்பேசும் சக்தியைப் பலப் படுத்துவதை இலக்காகக் கொண்டு பல்கலைகழக மாணவர்கள் தமது கல்விச் சுமைக்கு அப்பால் இதனை அடியொற்றி பல்கலைக்கழக மாணவர்களின் தலைமையிலும், சிவில், மத சுயாதீன குழுவினரின் மேற்பார்வையுடனும் நடைபெற்ற கலந்தரையாடல்களில், இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய ஆறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மூன்று சந்திப்புக்களும், ஒருங்கிணைவு முடிவும்

முதல் நடைபெற்ற மூன்று கூட்டங்களின்போதும், அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்ளடக்கிய சனாதிபதித் தேர்தல் தொடர்பான குழுக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் சார்பில் எதனை முன்னிறுத்தி பிரதான வேட்பாளர்களுடன் கலந்துரையாடுவது என்பதுபற்றியும், தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் மற்றும் உடனடியான பிரச்சினைகள் அடங்கிய பொது ஆவணம் ஒன்று தயாரிக்கும் நோக்குடன் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளின் முன்மொழிவுகள் தனித்தனியாகப் பெறப்பட்டன.

இந்த முன்மொழிவுகள் இறுதிசெய்யப்பட்டு சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் முன்வைப்பதற்கான பொது நிபந்தனைகளை உள்ளடக்கிய ஆவணமும் தயாராகி கட்சிகளின் அங்கீகாரத்தினைப் பெற்று இறுதி முடிவு செய்வதற்கான கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 13ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்..

முன்பக்கத் தொடர்ச்சி... பொது இணக்கப்...

முடிவின்றி முடிவடைந்த 4ஆவது கலந்துரையாடல்

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற அனைத்து அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் செம்மையான வகையில் தயாரிக்கப்படுவதில் தமது முழுமையான ஒத்துழைப்பினை மனப்பூர்வமாக இணைந்து மேற்கொண்டிருந்தார்கள். இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, தாயக கோட்பாடுகளை முன்வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் பல்வேறு சொல்லாடல் திருத்தங்களை மேற்கொள்ளவும் ஏனைய தரப்புக்களும் அதற்கு இணக்கத்தினை வழங்கி செம்மைப்படுத்தல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இறுதியில், பாராளுமன்றத்தில் புதிய யாப்புருவாக்கத்தின் இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சியை முன்னிலைப்படுத்துவதாக அமைவதால் அதனை நிராகரிக்கவேண்டும் என்பதனையும் குறித்த ஆவணத்தில் உள்வாங்கவேண்டும் என்று தமிழ் தேசியமக்கள் முன்னணியினர் பிரேரித்தனர்.

இதனையடுத்து பங்கேற்ற கட்சிகளுக்கிடையில் ஒன்றிற்கொன்று முரணானவாதங்கள் முன்வைக்கப்பட்டு நீண்டநேர வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. முடக்கப்பட்டுள்ள புதிய யாப்புக்கான இடைக்கால அறிக்கை பற்றி ஏன் கலந்துரையாடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இருந்தன. இருப்பினும், ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர் இடைக்கால அறிக்கை மற்றும் புதிய யாப்புக்கான செயற்பாடுகள் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்களையும், ஐ.தே.கவின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் மையப்படுத்தியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த விடயத்தினை உள்ளீர்க்க வேண்டும் என்று இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்தது.

இதனால், அன்றையதினம் இரவு 11மணிவரையில் நீடித்த கலந்துரையாடல், முடிவுகள் எட்டப்படாத நிலையிலேயே முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
எனினும் இறுதி முயற்சியாக கட்சிகளினுள் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இறுதிக் கலந்துரையாடலொன்று மறுதினமான 14ஆம் திகதி 1.30மணிக்கு ஏற்பாடாகியது.

ஐந்தாவது கலந்துரையாடலும், ஐந்து கட்சிகளின் இணக்கமும்

கலந்துரையாடல், திட்டமிட்டபடி ஆறு கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் ஆரம்பமானது. விசேடமாக ஆறு கட்சிகளின் தலைவர்களும் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முதல் நாள் விட்ட இடத்திலிருந்து மீண்டும் புதிய அரசியல் யாப்புக்கான இடைக்கால அறிக்கையினை நிராகிக்க வேண்டும் என்பதனை ஆவணத்தில் உள்ளடக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது. தமிழரசுக்கட்சி, புளொட் என்பன அதனை ஆவணத்தில் உள்ளடக்க கூடாது என்றும் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழியின் பேரிலேயே யாப்பு உருவாக்க முயற்சி இடம்பெறுகின்றது. அதனை நாம் குழப்பி விடக்கூடாது என்றும், குறிப்பிட்டன. அதேவேளை நாம், இடைக்கால வரைபு வந்தபோதே அதனை எதிர்த்தவர்கள் என்றும், இன்றைய நிலையில் அதனை ஆவணத்தில் உள்வாங்கி தமிழரசுக் கட்சியினருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதனை தவிர்க்க வேண்டுமென்றும் தாம் ஒன்றாக பயணிப்பவர்கள் என்பதால் இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து இவ்ஆவணத்தில் இடைக்கால அறிக்கை நிராகரிப்பதை உள்ளடக்க தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதாகவும் ரெலோ கூறியது. தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன. இடைக்கால அறிக்கையினை வெளிப்படையாக நிராகரித்துள்ளபோதும், புதிய யாப்பு உருவாக்கம் கைவிடப்பட்ட நிலையிலும், இவ்ஆவணத்தில் ஒற்றையாட்சி நிராகரிப்பு என்ற வாசகம் இருப்பதன் அடிப்படையிலும் இடைக்கால அறிக்கைபற்றி இவ்ஆவணத்தில் உள்ளடக்க வேண்டிய தேவை இல்லை எனவும் வாதிட்டனர். ஆனால் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினர் இவ்வாதங்களுடன் உடன்பட மறுத்து அதற்கான நியாயப்பாடுகளை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தியவாறிருந்தனர். குறிப்பாக இவ்யாப்பு உருவாக்க முயற்சி தொடர வாய்ப்புள்ளமையை சனாதிபதி வேட்பாளர்களின் கருத்துக்களை குறிப்பிட்டு முன்வைத்தார்கள். அதனால் ஒற்றையாட்சி இடைக்கால வரைபு நிராகரிக்கவேண்டும் எனும் தமது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை.

விவாதம் நீண்டுகொண்டு செல்வதாலும், இதனை ஓர் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனும் நோக்கிலும் பொது இணக்க ஆவணத்தின் அடிக்குறிப்பிலேனும் இடைக்கால அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என தமிழ்த்தேசியமக்கள் முன்னணி பிரேரித்த விடயத்தினை குறிப்பிடலாமென சிவில், மத சுயாதீன தரப்பினரால் கருத்தொன்று முன்வைக்கப்பட்டது. அதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொண்ட போதும் ஏனைய கட்சிகள் ஏற்க மறுத்ததோடு அவ்வாறு செய்வதால் பொது ஆவணம் பலவீனமடையும் எனக் கூறி அதனை அடியோடு மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் இறுதியாக இடைக்கால அறிக்கை நிராகரித்தல் வேண்டும் என்ற விடயத்தை ஆவணத்தில் உள்ளடக்காது விடுவது என்பதுடன் இது தொடர்பாக தமிழ் தேசியமக்கள் முன்னணி உட்படக் கட்சிகள் வெளிப்படுத்திய கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் பல்கலைக்கழக மாணவர்கள் ஊடக அறிக்கை ஒன்றின் மூலமாக பகிரங்கப்படுத்துவதென்றும் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டு கையொப்பமிட வேண்டும் எனவும் பல்கலைக் கழக தரப்பினர் கேட்டுக்கொண்டனர்.

இருந்தபோதும் தமிழ் தேசியமக்கள் முன்னனி கையொப்பமிட மறுத்தது. அதனையடுத்து சிவில், மத சுயாதீன குழுவினர் மேற்கொண்ட சமரச முயற்சிகளும் வெற்றி அளிக்கவில்லை. இந்நிலையில் தமிழ் தேசியமக்கள் முன்னணி இப்போது உடன்பாட்டில் கையொப்பமிட மறுத்து வெளியேறியது. இந்நிலையில் ஏனைய ஐந்து கட்சிகளும் கையொப்பமிட்டதோடு தொடர்ந்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு ஐந்துகட்சித் தலைவர்களும் அடங்கியகுழுவினர் பொது ஆவணத்தை முன்வைத்து மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதென்றும், அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நகர்வுகளினை தீர்மானிப்பதென்றும் ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மறக்கமுடியாத மனநிலையும்,கழுவப்பட்ட பாவங்களும்

வடக்குக் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் அரசியல் கட்சிகளை இணைப்பதற்காக எடுத்த இந்த முதல் முயற்சி மாணவர்கள் குறித்த நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் அதிகம் விதைத்துள்ளது. அத்துடன் தீர்க்கமான இறுதி கலந்துரையாடல்களில் பங்கேற்ற அரசியல் கட்சியொன்றின் தலைவர், கலந்துரையாடல் நடைபெற்ற பிரைட்டன் விடுதி நோக்கி செல்லும்போது தனக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்திற்குச் செல்வது போன்ற உணர்வு ஏற்பட்டதாக பெருமைப்பட்டுள்ளார். இதுவும் உணர்வுரீதியான விடயமாகும். இதனைவிடவும் கூட்டமைப்புக்கு எதிராக குறிப்பாக தமிழரசுக் கட்சிக்கு எதிராக மிகக் கடுமையான விமர்சனங்களை பொதுவெளியில் முன்வைத்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் என்பன ஒரே மேசையில் அமர்ந்திருந்து, தமிழ்த் தேசிய பரப்பில் செயற்படும் கட்சிகள் என்று மாணவர்கள் விழித்துக்கொண்டமைக்கு புத்துயிர் அழித்து கூட்டமைப்பை சமநிலைப்படுத்தினார்கள்.

போரின் பின்னரான சூழலில் சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை அரசை பாதுகாத்து, அரசியல் தீர்வினை நலிவுறுச்செய்தது உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்களை சுமந்து கொண்டிருந்தது. கூட்டமைப்பினர் குறிப்பாக 2015 இலிருந்து தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை புறந்தள்ளி அபிவிருத்தியே எமது முழுமூச்சு என்ற கோசத்துடன் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் பிரிவாக வலம் வந்ததால், அடுத்த பாராளுமன்ற தேர்தலில் மக்களிடத்திலிருந்து தூக்கி எறியப்படும் ஆபத்து சூழ்ந்திருந்த நிலையில் பொது ஆவணத்தில் மாவை.சேனாதிராஜா கையொப்பமிட்டதன் மூலம் விமர்சனங்களை தற்காலிகமாக கூட்டமைப்பினர் தகர்த் தெறிந்துள்ளனர்.

தமிழினத்தின் சத்துருவாக இருந்த சுமந்திரன் கலந்துரையாடல்களில் பங்கேற்றபோது தனது எஜமானுக்கு வலுச்சேர்க்கும் வகையில் குழப்பங்களை அல்லது சட்ட இக்கட்டுகளை செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் இறுதியில் “எனக்கு எல்லாம் அலுத்துவிட்டது. போடவேண்டியதை போடுங்கள்” என்று கூறியமையும், குருவை மதித்த சீடனாகவும் செயற்பட்டார். இதனால் சத்துருவாக தெரிந்தவரின் விம்பம் தலைகீழாக மாறியமைக்கு பின்னால் அடுத்த பாராளுமன்ற தேர்தலையும், கூட்டமைப்பின் தலைமைப் பதவியையும் அவர் இலக்கு வைத்து அடங்கிப் போவதாகவே அரசியல் பொதுவெளியில் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஐந்து கட்சிகள் இணைந்திருப்பது முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் இலங்கை அரசை பாதுகாப்பதை தமது முழுநேரப் பணியாகக் களமாடிய கூட்டமைப்பினர் தம்மைப் புனிதப்படுத்துவதிலும் தமக்கு சாதகமாக காய்களை நகர்த்துவதிலும் எடுக்கும் முயற்சிகளை உளத் தூய்மையோடு மாணவர் சமூகம் விழிப்புடன் இருந்து தகர்த்தெறிய வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

காவல்துறையால் 20.10.2016 அன்று மிலேச்சத்தனமாக சுட்டு படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களான நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவுதினம் இன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பி.எஸ். பபிலராஜ் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்க மாணவர் ஒன்றியத் தலைவர் ழி. திவாகரன் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து ஏனைய பீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மாணவர்கள் சுடர்களை ஏற்றினர்.

5ம் பக்கத் தொடர்ச்சி... அமெரிக்கா ஏன்

அரசாங்கத்தையும் இலகுவாக் கையாள முடியும் என்ற கணிப்பீடு அமெரிக்காவுக்கு நிச்சயம் இருக்கும். ராஜபக்ச குடும்பம் அமெரிக்காவின் கையை மீறி நடக்குமிடத்து போர்க்குற்ற விசாரணைகளின் பேரால் சர்வதேச நீதிமன்றத்தின் முன் கோத்தபாயவை நிறுத்த வாய்ப்புண்டு. ஏற்கனவே யூகோஸ்லாவியாவின் சனாதிபதியாக இருந்த மிலோசேவிக்கை இனப்படுகொலையின் பெயரால் சர்வதேச நீதிமன்றத்தின் முன் அமெரிக்கா நிறுத்தியதை இங்கு மனங் கொள்ளலாம்.

அமெரிக்கா தனது குடிமகன் எவரையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த ஒப்புக் கொள்ளாத ஒரு நாடு. எனவே அமெரிக்க குடிமகனாக இருக்கக்கூடிய கோத்தபாயவை விடவும் அமெரிக்க குடிமகனாக அல்லாத இலங்கை குடிமகனாக இருக்கக்கூடிய கோத்தபாய அமெரிக்காவுக்கு பலமே தவிர பலவீனம் அல்ல. இதனை ஈழத்தமிழ் தரப்பு சரிவரப் புரிந்து கொண்டால் இங்கு நிலைமைகளை தமிழர் தமக்கு சாதகமாக கையாள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு. சனாதிபதித் தேர்தலின் பின்பு மேற்குலகம் ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக நடப்பதற்கான சர்வதேசச் சூழல் இதன் பின்னணியில் உண்டு. பகமை— பகமை என்ற பழகிப்போன தீங்கான, பிழையான அரசியல் மனப்பாங்கை கடந்து சூழலை புத்திசாலித்தனமாக கையாளுதல் என்கின்ற சாதுரியம் மிக்க அரசியலை தமிழ் தலைவர்களும், தமிழ் அறிஞர்களும் தேர்ந்தெடுக்க வேண்டும். சிங்களத் தரப்பிடம் அரச கட்டமைப்போடு கூடிய நீண்ட மெருகான ராஜதந்திரி பாரம்பரியம் உண்டு. சிங்களத் தலைவர்கள் அரசியலை முழுநேரத் தொழிலாகக் கொண்ட வாழ்க்கை முறையை உடையவர்கள் என்ற வகையில் அவர்களிடம் அரசியலில் போதிய தந்திரங்கள் விருத்தி அடைந்துள்ளன. அரச இயந்திர கட்டமைப்புக்கூடாக அவர்கள் மத்தியில் அரசியல் இராஜதந்திரத்தில் தொழில்சார் பணியாளர்களும், நிபுணர்களும் காணப்படுவதால் அத்தகைய மூளைகளின் பங்களிப்பு அரசியல் தலைவர்களை சென்றடைகின்றது. ஆதலினால் மூலோபாய ரீதியாக உலகளாவிய அரசியலையும், பிராந்திய அரசியலையும், இனவழிப்புக்கான அரசியலையும், மற்றும் அரசியல் கட்டமைப்புகளையும் சிறப்புற அவர்களால் வடிவமைக்க முடியும்.

இத்தகைய பின்னணியில் பதவிக்கு வரும் அரசாங்கங்களும், தலைவர்களும் சர்வதேச அரசியலை நுணுக்கமாக புரிந்து கொண்டு நமது தேவைக்கேற்ப கையாளக்கூடிய அடிப்படையை கொண்டுள்ளனர். ஆனால் தமிழர் தரப்பில் இவையெல்லாம் வெறுமையாகவே உள்ளன. ஆயுதப்போராட்ட கால சூழலில் சேர். ஜோன் கொத்தலாவல டிபன்ஸ் பல்கலைக்கழகத்தை நீண்ட நோக்குப் பார்வையுடன் அவர்கள் வடிவமைத்துள்ளார்கள்.

பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை, மூலோபாயக் கற்கைநெறிகள் சார்ந்து அந்தப் பல்கலைக்கழகம் சிங்கள் அறிஞர்களை உருவாக்கத் தொடங்கியுள்ளது. இத்தகைய பின்னணியில் சிங்கள ஆட்சியாளர்களிடம் ஒரு பலமான அறிஞர் படை (Intellectual Brigade) காணப்படும் சூழலில் நெருக்கடி மிகுந்த சர்வதேச அரசியலை அவர்கள் சாதுரியமாக கையாளக்கூடிய அடிப்படைகளை கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில் இவை வெறுமையாக காணப்படும் பின்னணியில் மேற்படி புதிய சர்வதேச அரசியற் சூழல்களை எல்லாம் புத்திப்பூர்வமாகவும், நுண்மான் நுழைபுலனுடனும் நடைமுறைக்கு பொருத்தமாகக் கையாள்வார்கள் என்று எண்ணுவது கடினம். காலத்துக்குப் பொருத்தமாக சர்வதேச அரசியலையும், உள்நாட்டு அரசியலையும் கையாளவல்ல புதிய சிந்தனையும், புதிய பார்வையும், புதிய அணுகுமுறையும், இவை அனைத்துக்குமான ஒரு புதிய மனப்பாங்கும், புதிய அரசியல் பண்பாடும் இல்லாமல் இத்தகைய புதிய சூழலை ஒருபோதும் கையாளவும் முடியாது வெற்றிக்கு வழி தேடவும் முடியாது. புதிய சிந்தனையும், பரந்த அரவணைப்பும், ஆக்கபூர்வ செயற்போக்கும் இல்லையேல் தமிழ் மக்கள் தமக்கான தேசியப் பெருமையை நிலை நாட்டவும் முடியாது. வெற்றிக்கு வழிதேடவும் முடியாது. புதிது புதிதாக உருவாக்கக்கூடிய மேற்படி சர்வதேச, உள்நாட்டு அரசியல் சூழல்களை கையாளவும் முடியாது.

5ம் பக்கத் தொடர்ச்சி... ஐந்து கட்சிகளது...

காரணம் எந்த அரசியல் கட்சியும் தனது உறுப்பினருக்கும், ஆதரவாளர்களுக்கும் தனது நிலைப்பாட்டினை அறிவித்தாக வேண்டும். அப்படியில்லாத சந்தர்ப்பத்தில் அது ஒரு போலியான வலுவற்ற கட்டமைப்பாக கட்சி மாறுவதனை ஏற்படுத்தும்.

அதற்காக தமிழ் மக்கள் எப்போதும் பலியிடப்பட முடியாது. அதனாலேயே தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை வேண்டும் என்ற வாதம் ஏற்படுத்தப்பட்டது. அது முடிவுகளை எடுப்பதற்கும், தமிழரது நிலைப்பாட்டை தெரிவிக்கவும் பொருத்தமான விடயமாக அமையும்.

எனவே தமிழ் கட்சிகளிடையே ஏற்பட்ட ஐக்கியத்திற்கு அமைவாக செயற்பட வேண்டிய பொறுப்பாண்மை அக்கட்சிகளுக்குரியதாகும். அதன்பால் செயல்படுவதுடன் எதிர்காலத் திட்டமிடலை அக்கட்சிகள் உரையாடி தீர்மானிக்க வேண்டும். சனாதிபதித் தேர்தல் வாய்ப்புக்களை தருவதாக இல்லாது விட்டால் அது தரும் சவால்களை புரிதல் அவசியமானது.

அதனை இனிவரும் தேர்தலில் எதிர்கொள்வதற்கான முன்னகர்வுகளை நோக்கி சாத்தியமான வழிமுறைகளை கண்டறிதல் வேண்டும். பொருத்தமற்ற முடிவுகளால் தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைக்காது இருப்பதே ஐந்து கட்சிகளின் கூட்டுக்கு அவசியமானதும், வெற்றிகரமானதுமான பக்கமாகும்.

5ம் பக்கத் தொடர்ச்சி... போர் வெற்றியை

நிர்வாகத்தினை நடத்தினார் என்பதை அனைவரும் அறிவார்கள். அவர் அறியாது எந்தவொரு துரும்புமே அசையாத நிலைமை தான் இருந்தது. அப்படியிருக்கையில் அவர் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி பொறுப்புக்கூறலிலிருந்து தப்பித்து விட முடியாது.

அதுமட்டுமன்றி முப்பது வருடகால போரை முடித்தோம் என்று கூறி போர் வெற்றிக்கு உரிமை கொண்டாடிக்கொண்டிருக்கும் கோத்தாபய காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்திற்கு இராணுவ தளபதிகளை நோக்கி கையைக்காட்டுவது நியாயமற்ற செயற்பாடாகும். மேலும், எம்மிடத்தில் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி கண்ணால் கண்ட சாட்சியங்களே உள்ளன.

உதாரணமாக, எனது மகனை விசாரணைக்காக ஓமந்தையில் வைத்து அழைத்துச் சென்ற சமயத்தில் படையினர் சில பதிவேடுகளில் அவருடைய பெயர் விபரங்களைச் செய்திருந்தார்கள். அதன் பின்னர் நான் எனது மகனை கண்டிருக்கவே இல்லை. அவரை அழைத்துச் செல்வதற்காக பதியப்பட்ட அந்த ஆவணங்கள் நிச்சயமாக படைகளிடத்தில்தான் இருக்கும்.

அதேபோன்று விடுவிக்கப்பட்டவர்களின் ஆவணங்களும் அவர்களிடத்தில் உள்ளது. ஆகவே காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்றால் அதற்கான சான்றாதாரத்தினை அவர்கள் தான் வெளிப்படுத்த வேண்டும்.

நேர்மையானவர்கள் என்றால் சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்களை விடுதலை செய்துவிட்டோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு படைகளுக்கும், அதற்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்குமே காணப்படுகின்றது. சனாதிபதி மைத்திரி அந்த ஆவணங்களை வெளியிடுவதாக எம்மிடத்தில் கூறியிருந்தபோதும் இதுவரையில் எந்த ஆவணங்களையும் வெளியிடவில்லை. குற்றம் செய்த அரசியல் தரப்பினர் என்றுமே அதனை ஏற்றுக்கொண்ட வரலாறே எமது நாட்டில் இல்லை.

குர்திஸ்-சிரியா உறவு மேற்காசிய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

பல நூற்றாண்டுகளாக தனி நாடு கோரிவரும் குர்திஸ் இன மக்கள் மீது மீண்டும் ஒரு அழிப்பு நடவடிக்கையை துருக்கி அரசு ஆரம்பித்துள்ளது. தனது எல்லைப் பகுதியை உள்ளடக்கி குர்திஸ் இனம் தனிநாட்டுக்கான போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றமை துருக்கிக்கு ஆபத்தான விடயமாகவே அமைந்துள்ளது. துருக்கி, ஈரான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் நிலப்பரப்புகளை உள்ளடக்கியே குருத்திஸ்தான் விடுதலைப் போராட்டம் நிகழ்ந்துவருகிறது. இக்கட்டுரையும் குருத்திஸ் மக்கள் மீதான துருக்கியின் படையெடுப்பும் அமெரிக்காவின் ஆணுகுமுறையும் குருத்திஸ் தலைமைகளின் உத்திகளும் உரையாடப் படவுள்ளது.

ஈரான், ஈராக், சிரியா, துருக்கி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய குர்திஸ்தான் தனி நாட்டுக்கான கோரிக்கை பலநூற்றாண்டுகளாக முன்வைக்கப்பட்டு ஆயுதப் போராட்டமாக நிகழ்த்தப்பட்டுவருகிறது. குர்திஸ் மக்களின் வரலாறும், இருப்பும் நீண்ட நெருக்கடிகளைக் கொண்டது. குர்திஸ் இனக்குழு நீண்ட வரலாற்றைக் கொண்டது. குறிப்பாக ஓட்டமன் சாம்ராஜ்ஜியத்தின் ஓர் அலகில் தனித்துவமாக இனமாக வாழ்ந்தாலும் முடியாட்சி பாரம்பரியத்தினால் சுதேசிய அடையாளத்தையும், தனித்துவத்தை பேணமுடியாதவர்களாக மாறினர். அதன் பயனாக மேற்காசியாவின் ஈரான், ஈராக் சிரியா, துருக்கி ஆகிய நாடுகளில் சிதறி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருந்தபோதும் அந்தந்த நாடுகளில் வாழ்ந்த குர்துக்களின் ஒருமைப்பாட்டையும், தமது பண்பாட்டையும் பேணிவந்தனர். ஆனால் அந்த நாடுகளின் எதிர்ப்புகளால் குர்திஸ் இனம் எதிர்கொண்ட துயரத்தினாலும், அழிவுகளாலும் காலப்போக்கில் இந்நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கி தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அனைத்து நாடுகளாலும் ஒடுக்கப்பட்டு, அழித்தொழிக்கப்பட்டு, சித்திரவதையும், படுகொலைக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதை இன்றுவரையும் அனுபவித்தே வருகின்றனர். இத்தகைய துயரம் அவர்கள் வாழ்ந்த எல்லா நாடுகளிலும் எதிர்கொண்டனர். 1970 களில் மட்டும் ஈராக்கின் அல் அன்பால் பிராந்தியத்தில் மட்டும் 18,2000 குர்திஸ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஈராக் மீதான அமெரிக்க கூட்டுப்படையின் படையெடுப்புக்கு பின்னர் குர்திஸ்தான் பிராந்தியம் தன்னாட்சிப் பகுதியாக மாறியது.

அமெரிக்கா ஈராக் மீது தலையீடு செய்த பின்னர் குர்திஸ்களுக்கான சனநாயகச் சூழலை ஈராக்கில் ஏற்படுத்தியிருந்தமை கவனிக்கத்தக்கது. குர்திஸ்கள் தாம் முன்வைத்த குர்திஸ்தான் அரசை உருவாக்க முயற்சித்ததை ஈராக்கில் சதாம் உஸைனின் வீழ்ச்சிக்குப் பின்னர் சாத்தியப்படுத்த திட்டமிட்டனர். இதனடிப்படையிலேயே கடந்த செப்ரெம்பர் 25 . 2017 இல் ஈராக்கில் தனியரசுக்கான பிரகடனத்தின் கீழ் பொது வாக்கெடுப்பொன்றினை நிகழ்த்தினர். அதில் 92 சதவீதமான மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனை அடுத்து அப்பிராந்தியம் முழுவதும் குர்திஸ்களுக்கு எதிரான அணுகுமுறையில் அவ் அரசுகள் தீவிரம் காட்டத் தொடங்கின. இந்த சந்தர்பத்திலேயே அமெரிக்கா தனது துருப்புக்களை அதிகமாக சிரியாவின் எல்லைக்குள் நகர்த்தியது. அல்டான்ப் தளமானது ஈராக்கின் எல்லையோரமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிரியாவுக்குள் அது அமைந்தாலும் ஈராக்கினை கண்காணிக்கவும், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுடனான உறவை பராமரிக்கவும் அத்தளம் அமெரிக்காவுக்கு உதவியது என்பதும் குர்திஸ் விடுதலைப்படைக்கு அதிக நம்பிக்கையை தந்த செய்தியாக இருந்தது.

ஆனால் அமெரிக்கா தனது படைகளை வெளியேற்றப் போவதாக அப்போது அறிவித்த மறுகணம் அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட குர்திஸ் விடுதலைப்படை மீளவும் ஒருதடவை வல்லரசுகளது நலனால் ஏமாற்றப்பட்டதாக கருதியது. அதே தவறை அமெரிக்கா மீண்டும் சிரியா எல்லையிலிருந்த தனது படைகளை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததும்

தரணி

துருக்கிய தாக்குதலுக்கு வழிவிட்டே தனது படைகளை விலக்குவதாகவும் தெரிவித்தது. அமெரிக்கா மீண்டும் ஒரு முறை தமக்கு முதுகில் குத்தியுள்ளதாக குருத்திஸ்தான் போராளிகள் தெரிவித்துள்ளனர். இத்தகைய நெருக்கடி குர்திஸ்தானியர்களுக்கு புதிதல்ல எனக் கூறிக் கொண்டாலும் ஆயுதப் போராட்டத்தை வலுவாக கடைப்பிடித்த ஒரு விடுதலைப்படையையே ஆதரவு வழங்கிய அதிக இலாபங்களை

இரசாயனத் தாக்குதலுக்கு உள்ளான குர்திஸ் சிறுவன்

அனுபவித்த அமெரிக்கா கைவிடுதல் என்பது தேசிய இனவிடுதலைக்கான மக்கள் கூட்டம் கவனத்தில் கொள்ளவேண்டிய படிப்பினையாகும். ஆயுதப்போராட்டத்தினை மட்டுமல்ல சதாம் உஸைனை காட்டிக்கொடுத்து அமெரிக்காவிற்கு அதிக இலாபத்தை ஏற்படத்திய இனம் குருத்திஸ்தானியர் என்பது தெரிந்த விடயம். அதனால் அரபு உலகம் முழுவதும் நிரந்தரமாகவே சின்னி முஸ்லீம்களின் வெறுப்பை சம்பாதித்த நிலையில் அமெரிக்கர்கள் கைவிடுதல் என்பதை புரிந்துகொள்ளுதல் அவசியம்.

மறுபக்கத்தில் தமது எல்லைப்புறத்தில் இருந்துகொண்டு தனி நாடு கோருவது ஆபத்து என துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் கருதுகிறார். குர்திஸ் இனப் போராளிகளை அழித்தொழிப்பதற்கான சமயமாக தற்போதைய சூழலை துருக்கிய அரசு கருதுகிறது. அமெரிக்காவின் வெளியேற்றம் குர்திஸ்கள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்த வாய்ப்பானதாக அமைந்துள்ளது. சிரியாவின் வடக்குப் பகுதியில் குர்திஸ்தான் படையினர் மீது துருக்கி தொடர்ச்சியான தாக்குதலை நடாத்தி வருகிறது. தற்போது வரை நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் நான்கு இலட்சம் மக்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். துருக்கியின் இச் செயலை ஐரோப்பிய நாடுகள் உட்பட மேற்குலக நாடுகள் கண்டித்துள்ளன. ஆனால் அமெரிக்கா திட்டமிட்டு நகர்ந்து ஒரு போரைத் தொடக்கிவிட்டு தற்போது அதனை எதிர்ப்பதாக ஊகப்போர் புரிகிறது துருக்கியுடன். அமெரிக்காவினதும், அதன் சனாதிபதியினதும் வார்த்தையில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. அமெரிக்காவுக்கு மேற்காசியாவில் ஒரு போர் தேவை என்பதையே கடந்த பல ஆண்டுகளாக அது முயன்றுவருகிறது என்பதையும் இப்பகுதியில் பல தடவை சுட்டிக் காட்டப்பட்டது. அதன் ஒரு வடிவமே துருக்கி குர்திஸ்தான் மோதல். ஆனால் அதனை சிரியா—துருக்கி போராக மாற்றுவதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது. அதனை ரசியா தடுத்துவருகிறது.

அதே நேரம் குர்திஸ்தான் போராளிகளுக்கும், சிரியா அரசிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு அதிக மாற்றங்களை குர்திஸ்தான் போராட்டத்தில் ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதாவது தாக்குதல் தொடர்ச்சியாக நிகழும் நிலையில், போராட்டத்தையும், மக்களையும் தற்காத்துக் கொள்வதற்காக சிரியா நெருக்கமான உறவை கொள்ள முயல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதன்படி தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மன்பீஜ் மற்றும் கோபேன் ஆகிய நகரங்களை சிரியாவிடம் ஒப்படைக்க குர்திஸ் போராளிகள் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு பிரதிபலனாக எல்லைப் படைகளை அனுப்பி, குர்திஸ்தான் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் துருக்கி இராணுவத்தை எதிர் கொள்ள சிரியா அரசு ஒப்புக்

தொடர்ச்சி அடுத்த பக்கம்..

சிலியில் புகையிரதக் கட்டண உயர்வை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

மெட்ரோ புகையிரதக் கட்டண உயர்வை எதிர்த்து சிலி நாட்டில் மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வரும் நிலையில் சாண்டியாகோவில் இன்று ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 6 ஆம் திகதி மெட்ரோ புகையிரதக் கட்டணத்தை 800 முதல் 830 சிலி பெசோக்கள் வரை அரசாங்கம் உயர்த்தியது. இதற்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு உருவானது. கடந்த வெள்ளிக்கிழமை சாண்டியாகோ மற்றும் பிற நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெள்ளிக்கிழமை அன்று போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க சாண்டியாகோ மற்றும் சாகபுகோ மாகாணங்களிலும், புவெண்ட் ஆல்டோ மற்றும் சான் பெர்னார்டோவின் பெருநகர நகராட்சிகளிலும் படையினர் நிறுத்தப்பட்டனர், ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர் என்று சின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்தது.

நேற்று (சனிக்கிழமை) நடந்த போராட்டத்தில் பாதுகாப்புப் படையினரை மீறி 41 சுரங்கப்பாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் அடித்து நொருக்கி சேதப்படுத்தினர். இதில் 11 பொதுமக்கள் மற்றும் 156 அதிகாரிகள் காயமடைந்ததாகவும், 49 காவல்துறை வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் காவல்துறை பொது ஆய்வாளர் மொரிசியோ ரோட்ரிக்ஸ் மேலும் தெரிவித்தார்.

இன்றும் நிலைமை கட்டுக்கடங்காமல் இருந்ததால் பாதுகாப்பு படையினர் ஒரு கூட்டத்தை நீர் பீரங்கிகளைக் கொண்டு கலைக்கச் செய்தனர், கலகப் பிரிவு காவல்துறையினர் இளம் எதிர்ப்பாளர்களை வேனில் ஏற்றியபிறகு வேனில் மோதல் வெடித்தன. இதனைத் தொடர்ந்து சிலி காவல்துறையினருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்த மோதல்களுக்குப் பிறகு சாண்டியாகோவில் ஊரடங்கு உத்தரவு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து சிலி நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் இராணுவ ஜெனரல் ஜேவியர் இட்ரியாகா கூறுகையில், "நகரங்களில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை மற்றும் இன்று ஏற்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளை ஆராய்ந்த பின்னர், சுதந்திரமாக செயற்படுதல் மற்றும் பொது இடங்களில் ஆட்கள் குவிவது போன்றவற்றைத் தடுக்க ஒட்டு மொத்த ஊரடங்கு உத்தரவு முடிவை நான் எடுத்துள்ளேன். நாளை இயல்புவாழ்க்கை தொடரும். மக்கள் கவலையின்றி வேலைக்குச் செல்லலாம்" என்று தெரிவித்துள்ளார்.

'வாட்ஸ் அப்' சேவைக்கு வரி விதித்த லெபனான் : கொந்தளித்த மக்கள்

லெபனான் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இந்த நிலையில் அந்த நாட்டு அரசு, வரி வருவாயை பெருக்கும் நோக்கத்தில், வாட்ஸ் அப், பேஸ்புக் மெசஞ்சர், அப்பிள் பேஸ்டைம் ஆகியவற்றை பயன்படுத்திப் பேசக்கூடிய அழைப்புகளுக்கு வரி விதிக்க அதிரடியாக முடிவுசெய்தது.

ஒவ்வொரு அழைப்புக்கும் 0.20 டொலர் (சுமார் ரூ.14) வரி விதிப்பதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்தது. இதைக் கேட்டதும் அந்த நாட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். கடந்த 2 நாட்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் கூடி அரசாங்கம் பதவி விலகக்கோரி கோஷங்களை முழங்கினார்கள். சாலைகளில் டயர்களை கொழுத்திப்போட்டார்கள்.

பல இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படைகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்து போராட்டக்காரர்களை விரட்டியடிக்கிற அளவுக்கு நிலைமை மோசமானது. இந்த மோதல்களில் பலர் படுகாயம் அடைந்தனர். நிலைமை மோசமாவதை உணர்ந்த அரசு அடிபணிந்தது. வாட்ஸ் அப், பேஸ்புக் மெசஞ்சர், அப்பிள் பேஸ்டைம் அழைப்புகளுக்கு விதித்த வரி விதிப்பை மீளப் பெறுவதாக அறிவித்தது.

ஆனாலும் போராட்டங்கள் ஓய்வதாக இல்லை. எல்லா மக்களுக்கும் உணவு, எரிபொருள், மற்ற அடிப்படை தேவைகளை அரசு நிறைவேற்றி வைக்க வேண்டும், இல்லையேல் பதவி விலக வேண்டும் என்று மக்கள் முழங்கி வருகின்றனர். பிரதமர் சாத் அல் ஹரிரி அரசு என்ன செய்வது என தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறது.

முன்பக்கத் தொடர்ச்சி... குர்திஸ்...

கொண்டதாக குர்திஸ்தானியர் கூறுகின்றனர். ஆனால் இதில் எதனையும்சிரியா அரசு வெளிப்படுத்தியதாக தகவல் இதுவரை இல்லை என்றே கூறலாம். சிரியா அரச படைகளுடன், சிரிய சனநாயகப் படைகள் குர்திஸ் பகுதிக்குள் அனுமதிப்பதன் மூலம் துருக்கியின் தாக்குதலை எதிர்கொள்ளலாம் என குர்திஸ் படைகள் நம்புகின்றன. அதனால் துருக்கியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சில பகுதிகளை விடுவிக்கவும் முடியும் என குர்திஸ்தான் போராளிகள் நம்புகின்றனர். குறிப்பாக துருக்கி ஏற்கனவே கைப்பற்றிய ஆஃப்ரின் போன்ற நகரங்களை விடுவிக்கவும் இது வழிவகுக்கும் என சிரியா சனநாயகப் படை கூறியுள்ளது. இவ்வகை உடன்பாடு குர்திஸ்தானியருக்கு முக்கிய மாற்றம் ஆகும். அதுவும் குறிப்பாக அமெரிக்காவின் உதவியை இழந்தபிறகு நடக்கும் முக்கிய மாற்றமாகும்.

அடுத்து அமெரிக்கா உட்பட உலக நாடுகளின் குர்திஸ்தான் மீதான போர் நடவடிக்கைகளை துருக்கி முன்னெடுத்தால் அதன் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் துருக்கிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். துருக்கிய தலைவருக்கு எழுதிய கடிதத்தில் மிக மோசமான வார்த்தைகளை பாவித்துள்ளார் ட்ரம்ப். ஆனால் இந்த எச்சரிக்கைக்குப் பதிலளித்த துருக்கி, அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டோம். குர்திஸ்தான் போராளிகள் மீதான போர் நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை என துருக்கிய நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மெவுல்ட் காவ்சகச்லோ தெரிவித்தார்.

அமெரிக்கா, துருக்கி மீதான 100 பில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தத்தினை இரத்து செய்ததுடன், அந்த நாட்டுடனான பேச்சுவார்த்தையையும் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. அதே நேரத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு துருக்கிய பிரச்சினையை தேசிய அவசர நிலையாக பிரகடனப்படுத்துமாறு ட்ரம்ப் கேட்டுள்ளார். இதே நேரம் சிரியாவுக்கான ரசியாவின் சிறப்பு தூதுவர் அலெக்ஸாண்டர் லாவ்ரெண்ட்யேஃப் துருக்கி மேற்கொண்டுள்ள இந்த தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார். முந்தைய ஒப்பந்தங்களின்படி துருக்கி, சிரியாவிற்குள் ஐந்து முதல் பத்துக் கிலோ மீற்றர் எல்லைக்குள் செல்லலாம். ஆனால் துருக்கி தற்போது சுமார் முப்பது கிலோ மீற்றர் பகுதியில் பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவதாக கூறுகிறது. சிரியாவில் நிரந்தரமாக படைகளை நிறுத்த துருக்கிக்கு உரிமையில்லை. போரினை தவிர்க்க துருக்கியோடு சிரியா தொடர்பில் இருப்பதாக அவர் கூறினார். ஆனால் அதனை நேட்டோ தரப்பு ஒப்புக் கொண்டதாக துருக்கி அறிவித்துள்ளது.

எனவே துருக்கியின் போர் வியூகம், அமெரிக்காவின் விலகல் என்பனவற்றிலிருந்து குர்திஸ் போராட்டத்தை தற்காத்துக் கொள்ளவதற்கான உத்தியை அப் போராட்ட அமைப்பு தொடங்கியுள்ளமை ஒரு புதிய பாதைக்கான அணுகுமுறையாகும். பல நூற்றாண்டுகளாக கைக்கொண்ட அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தினை குர்திஸ் மக்களுக்கு உருவாக்கப் போகிறது. அத்தகைய தாக்கம் சாதகமானதாகவோ, பாதகமானதாகவோ அமைய வாய்ப்புள்ளது. ஆனாலும் குருத்திஸ் விடுதலைப் போராட்டத்தின் புதிய திருப்பபத்தை சிரிய—குர்திஸ் உறவு ஏற்படுத்த போகிறது. இந்த உறவுக்கு பின்னால் மீண்டும் ஒரு வல்லரசு மறைந்திருப்பதாக அமைவது ஆபத்தானதாக குர்திஸ் போராளிகள் கருதுகின்றனர். குறிப்பாக ரஸ்ய—சிரியா நெருக்கமே அத்தகைய அச்சத்திற்கு காரணமாக கொள்ளப்படுகிறது.

பெற்றோரோடு சிறுவர்களை தூங்கவைக்கலாமா?

குழந்தைகள் பெற்றோரின் அருகாமையை எப்போதும் விரும்புகின்றன. பெற்றோர்கள் தன் அருகில் இருந்தால் அவை நம்பிக்கையும், உற்சாகமும் கொள்கின்றன.

தாய் தங்கள் அருகில் இல்லாவிட்டால் பயந்து அழத்தொடங்கிவிடுகின்றன. தாயின் அருகாமையை குழந்தைகள் வாசனையாலும், தொடுதலாலும் உணர்கின்றன. எல்லா குழந்தைகளும், எப்போதும் அம்மாவுடனே தூங்க விரும்புகிறது. அம்மா தன் அருகில் இல்லை என்பதை ஒரு சின்னஅசைவில் இருந்துகூட அது கண்டு கொண்டு விடுகிறது. அடுத்த கணம் அது அழுது தன் கண்டுபிடிப்பை உறுதி செய்து கொள்கிறது. அம்மாவின் குரலை கேட்டபிறகே அழுகையை நிறுத்துகிறது.

பாதுகாப்பு உணர்வோடு அம்மாவுடனே குழந்தைகள் தூங்க விரும்பும். அதே குழந்தைகள் பத்து வயதைக் கடக்கும்போது பிரச்சினைகள் உருவாகிறது. 15 வயதுக்கு மேலும் அப்படி அம்மாவுடனே தூங்கவிரும்பும் பிள்ளை களுக்கு ஆளுமைத்திறன் குறைந்திருப்பதாக புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவர்கள் எல்லா விடயத்திலும் 'அம்மா பிள்ளை'யாகவே இருந்து இளம்வயதுக்கே உரிய தங்கள் முடிவெடுக்கும் ஆற்றலை இழந்து விடுவார்கள்.

அதே நேரத்தில் சிறுகுழந்தைகளை பெற்றோர்கள் தங்கள் இருவருக்கும் இடையே படுக்க வைப்பது நல்லது. பல பெற்றோர்கள் இருவருமே வேலைக்கு போகிறவர்களாக இருப்பார்கள். இவர் களின் பிள்ளைகள் பகல் நேரங்களில் தாத்தா—பாட்டியின் பராமரிப்பிலோ, அல்லது வீட்டோடு இருக்கும் வேலைக்காரப் பெண்களின் நேரடிப்பார்வையிலோ தான் இருப்பார்கள். அதேநேரம் இரவு முழுக்க பெற்றோரின் அரவணைப்புக்குள் இருக்கும் வாய்ப்பு கிடைப்பதால் தங்கள் தனிமை ஈடு செய்யப்பட்டு விட்டதாக திருப்திப்பட்டுக் கொள்வார்கள். சில பெற்றோர் தங்கள் கூடவே குழந்தையை படுக்கவைக்கும்போது குழந்தைகள் படுக்கையை ஈரப்படுத்துவதை விரும்புவதில்லை. அதனால் தங்களுக்கு எட்டும் தூரத்தில் குழந்தையை தொட்டிலிலோ, கட்டிலிலோ படுக்கப் போட்டு விடுவார்கள். இம் மாதிரியான தள்ளி வைப்புக்குள்ளான குழந்தைகள் இரவில் பசித்து அழும்போது உடனடியாக தாயின் அனுசரணைக் குரல் (என்னடா செல்லம்...இதோ வாறண்டா!) கேட்டால் தனிமையை உணர மாட்டார்கள். 'குரல் கொடுத்ததுமே நம்மை கவனிக்க இங்கே நமக்கானவர்கள் இருக்கிறார்கள்' என்ற உணர்வு குழந்தைகள் மனதில் ஏற்பட்டுவிடும்.

குழந்தையை தங்கள் இருவருக்கும் இடையில் படுக்கவைப்பவர்கள் தங்கள் 'இரவுநேர நெருக்கத்திற்கு' இடையூறாக இருக்கிறது என்று கருதவும் இடமுண்டு. அந்த நேரத்தில் குழந்தை அழுது அவர்கள் தனிமையின் இனிமையை தகர்த்து விடுவதும் உண்டு. இதுபோக நடுநடுவே விழித்து அழும் குழந்தையால் அலுவலகம் போக வேண்டிய கணவரின் நிம்மதியான உறக்கம் தடைப்படுவதாக கவலைப்படும் சில தாய்மார்கள் குழந்தையை சற்றுத் தள்ளி படுக்கவைக்கும் எண்ணத்துக்குள் வந்து விடுகிறார்கள். இரண்டாவது குழந்தை பிறந்த நேரத்தில் முதல் குழந்தையை எங்கே படுக்கவைப்பது என்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதுவே கிராமங்களாக இருந்தால் விசாலமான வீட்டில் தாத்தா—பாட்டி வசம் முதல் குழந்தை ஒப்படைக்கப்படுகிறது. அதனால் முதல் குழந்தை தனிமை, இருட்டு, இட நெருக்கடி போன்ற சூழலுக்குத் தப்பி விடுகிறது. அதேசமயம் தனிக்குடித்தன நகர வீடுகளில் முதல் குழந்தையின் நிலை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இந்த மாதிரியான நெருக்கடிக்கு உள்ளாகும் முதல் குழந்தைகள், பெற்றோரின் இரண்டாவது குழந்தையை தங்கள் எதிரியாக பார்க்கத் தொடங்கி விடுகின்றன. இத்தகைய மனக்கசப்பு மூத்த குழந்தைகளுக்கு ஏற்பட்டு விடாதபடி பெற்றோர் கவனமாக இருக்கவேண்டும்.

முதல் குழந்தை தனிமைப் படுத்தப்பட்டு விட்டதாக எண்ணாத அளவுக்கு அந்தக் குழந்தையையும் தங்கள் அன்பால் ஈர்த்துக் கொள்ளவேண்டும். தாய் அருகே ஒரு குழந்தை படுத்துக் கொண்டால் அடுத்த குழந்தை தந்தையின் அருகே படுக்க வைக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யும்போது தாயிடம் காட்டும் பாசத்துக்கு இணையாக தந்தையிடமும் குழந்தைகள் ஒட்டிக்கொள்ளும்.

நான்கு— ஐந்து வயது பருவத்தில் தன்னைச்சுற்றி நடக்கும் சம்பவங்களை குழந்தைகளால் உணர்ந்து கொள்ள முடியும். அந்தக் குழந்தைகள் இரவில் விழிக்கும் நேரத்தில் பெற்றோரின் 'நெருக்கத்தைக்' கூட பார்க்கும் சூழல் ஏற்படக்கூடும். அந்த நேரத்தில் குழந்தையை தனியாக தூங்கவைப்பதை விட, குழந்தை தூங்கியபிறகு இவர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். அபூர்வமாய் இந்தவயதில் தனியாக தூங்கப்பழகிக் கொள்ளும் குழந்தைகளும் உண்டு. ஏழெட்டு வயதில் குழந்தைகள் சிறுவர்— சிறுமியர் என்ற பருவத்தை அடைகிறார்கள். இந்த பருவத்தில் அவர்களுக்கு வீட்டைத்தாண்டி பாடசாலை உள்ளிட்ட வெளி இடங்களில் இருந்தும் நண்பர்கள் கிடைக்கிறார்கள். இப்போது அவர்களாகவே தனியறையில் தூங்கும் அளவுக்கு அவர்களுக்குள் ஒரு மாற்றம் நேர்கிறது. இந்த வயதிலும் பெற்றோருடன் ஒரே அறையில் தான் தூங்குவேன் என்று அடம் பிடிக்கும் சிறுவர்களை நல்லவிதமாய் பெற்றோரே எடுத்துச்சொல்லி அவர்கள் தனியறையில் தூங்கும் பழக்கத்தை ஏற்படுத்திவிட வேண்டும். அவர்களின் மனோரீதியான வளர்ச்சிக்கு இது நல்லது.

கைகளை பாதிக்கும் கையடக்கத் தொலைபேசி

கையடக்கத் தொலைபேசிகளை உபயோகப்படுத்துவதற்கே பெரும்பாலான சிறுவர்—சிறுமியர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் புத்தகங்கள், பென்சில்களை கையாள்வதைவிட கையடக்கத் தொலைபேசிகளை உபயோகப்படுத்துவதற்கே பெரும்பாலான சிறுவர்—சிறுமியர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். கையடக்கத் தொலைபேசிகளை நீண்ட நேரம் கைகளிலேயே வைத்திருப்பது கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். பிற்காலத்தில் தங்களுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு கைகளை பயன்படுத்துவதற்கு சிரமங்களை சந்திக்க நேரிடும்.

ஒருசில அறிகுறிகளை கொண்டே அவர்களின் கைகள் பலவீனமாக இருப்பதை அறிந்து கொள்ளலாம். பொதுவாகவே எழுதுவது, ஓவியம் வரைவது, அதில் வண்ணங்கள் தீட்டுவது போன்ற செயல்களை சிறுவர்கள் ஈடுபாட்டோடு செய்வார்கள். அவர்களது கைகள் பலவீனமாக இருந்தால் பென்சில்களை சீராக கையாள்வதற்கு சிரமப்படுவார்கள். நோட்டில் எழுதும்போது அவர் களது கையெழுத்தை வைத்தே கைகளின் வலிமையை கண்டறிந்துவிடலாம். கைவிரல்கள் வலியாகவோ, பலவீனமாகவோ இருந்தால் அவர்கள் எழுதும் எழுத்துக்கள் அழுத்தமாக இருக்காது. மெல்லிய கோடுகளை போல தென்படும். அவர்கள் சாப்பிடும் வழக்கத்தை கொண்டும் கைகளின் செயல்திறனை அளவிட்டு விடலாம். சாப்பிடும் டிபன் பாக்ஸ்களை திறப்பதற்கு சிரமப்படுவார்கள். தண்ணீர் பாட்டிலை திறக்கவும் கைவிரல்கள் சிரமப்படும். சாப்பிடும்போது உணவுகளை சிந்திக்கொண்டிருப்பார்கள்.

ஷூக்கள் அணியும்போது கால்களை அதற்குள் நுழைப்பதற்கு சிரமப்படுவார்கள். ஷூக்களை கைவிரல்களை கொண்டு கட்டுவதற்கும் தடுமாறுவார்கள். அதுபோல் சட்டையில் பட்டன்களை மாட்டுவதற்கும் திணறுவார்கள். விளையாட்டு பொருட்களை பயன்படுத்தி விளையாடும் ஆர்வம் குறைந்து போய்விடும். சோப்பு போட்டு கைகளை கழுவுவதற்கும் தடுமாறுவார்கள்.